07.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாற்று பண்ணையாளர்கள் உரிமம் பெற வேண்டும்!

இன்று தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் நாற்று உற்பத்தியாளர்களும், விற்பனையாளர்களும் பெருகி விட்டனர். குறைந்த விலைக்கு வாங்கி, தரமற்ற கன்றுகளை/நாற்றுகளை வாங்கி வந்து, அதிக விலைக்கு விற்கின்றனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நாற்றுப்பண்ணைகளில் பல வகைப் பழமரக் கன்றுகள், தென்னை போன்ற பல வகையான கன்றுகள் விற்கின்றனர். பலவற்றை இங்கே உற்பத்தி செய்தும், பலவற்றை இதர மாநிலங்களில் இருந்து விலைக்கு வாங்கியும் விற்கின்றனர். இவற்றின் தரத்தை விநியோகம் செய்யும் பொழுதே ஆய்வு செய்து உறுதிப்படுத்துவதன் மூலம் தரமற்ற நாற்று விற்பனையைத் தடுக்கலாம்.இதன் ஒரு பகுதியாக நாற்று வணிகத்தை நெறிப்படுத்த அனைத்து நாற்று பண்ணை உரிமையாளர்களும் ஆகஸ்ட் 2015 இறுதிக்குள் "விதை உரிமம்" எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றார்கள். நாற்றுப் பண்ணைகள் வைத்திருப்போர் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983-ன் படி கட்டாயமாகும். உரிமம் பெறாமல் நாற்று விற்போர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து மேலும் விபரம் அறிய விதை ஆய்வு துணை இயக்குனர், குறளகம், இரண்டாவது மாடி, ஐகோர்ட் அருகே, சென்னை-1 என்ற முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும். அலுவலக தொலைபேசி எண்.

044 - 253 43339 ஆகும்.மேலும் தமிழகமெங்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் விதைச்சான்று அலுவலர்கள் உள்ளனர். அதன் இயக்குனர் அலுவலகம் சென்னையில் உள்ளது. முழு விபரங்களுக்கு : இயக்குனர், (விதைச் சான்று துறை, 1424, தடாகம் சாலை ஜி.சி.டி. போஸ்ட், கோயம்புத்தூர்-13. அலைபேசி : 0422 - 243 2984,www.seedtamilnadu.com

இந்த நாற்று உற்பத்தி, விற்பனை பற்றிய முழு விபரங்கள் அறிய இத்துறையில் ஈடுபட்டு பொருளிட்ட விரும்புவோர் கீழ்க்கண்ட வலைத்தளங்கள்
பாருங்கள். www.tnau.gn.in, www.seednet.gn.in, www.indiaseeds.com, www.tasamb.gov.in, www.seedsinfotech.com, www.farmer.gov.in

**- எம்.ஞானசேகர்,விவசாய ஆலோசகர் 93807 55629**

## சின்னச் சின்ன செய்திகள்




குங்குமப்பூ: குளிர்பிரதேசங்களில் மட்டுமே குங்குமப்பூ துளிர் விடுகிறது. காஷ்மீர் மட்டுமே குங்குமப்பூ சாகுபடிக்கும் சாத்தியமாகி வருகிறது. இச்செடிகள் 10 முதல் 20 செ.மீ. உயரம் வரை வளரும். கிழங்குகள் மூலம் நடவு செய்யப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு சுமார் 1,80,000 கிழங்குகள் நடவு செய்யலாம். இயற்கை முறையாக பராமரிக்க வேண்டும். அக்டோபரில் தொடங்கி டிசம்பர் வரை பூக்கின்றது. அந்த பூக்களின் மத்திய பகுதியில் உள்ள மகரந்த தாளே ""குங்குமப்பூ" என்று

அழைக்கப்படுகிறது.

இவை சிவப்பு கலந்த மஞ்சள் நிறத்தில் மெல்லிய நார் போன்று காணப்படும். குங்குமப்பூ பூத்த 3 முதல் 4 நாட்களில் அறுவடை செய்யப்படுகிறது. பின்னர் அவை 15 முதல் 20 நாட்கள் வரை வெயிலில் உலர வைக்கப்படுகிறது. அப்போது அந்தப் பூவில் உள்ள குங்குமப்பூக்கள் தனியாகப் பிரிந்து விடும். சுமார் 40 முதல் 50 பூக்களிலிருந்து 1 கிராம் அளவே குங்குமப்பூ கிடைக்கிறது. குங்குமப்பூக்கள் மருந்தாகப் பயன்படுகின்றன. வாசனைக்காகவும், நிறத்திற்காகவும் மற்றும் உணவுக்காகவும் அதிகம் பயன்படுகின்றன. முதல் ரகப் பூக்கள் 1 கிலோ 3 லட்சம் முதல் 4 லட்சம் வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போது கொடைக்கானல் பகுதியில் குங்குமப்பூ கிழங்குகள் நடவு செய்து 4 வருடம் ஆகிறது. காஷ்மீரில் அக்டோபர் மாதத்தில் பூக்கும் பூக்கள் கொடைக்கானலில் செப்டம்பர் மாதத்திலேயே பூத்து விட்டன. இதுவரை 50க்கும் மேற்பட்ட பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இது ஒரு மிகப்பெரிய வெற்றியாகும். கருவுற்றிருக்கும் பெண்கள் தங்களுக்குப் பிறக்கும் குழந்தை சிவப்பாகவும், கொழுகொழுவென இருக்க வேண்டும் என்ற ஆசையில் குங்குமப்பூவை பாலில் கலந்து அருந்துவார்கள். ஆனால் இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. கருவுற்ற 5 மாதம் முதல் 9 மாதம் வரை குங்குமப்பூவை பாலில் கலந்து குடித்து வந்தால் தாயின் இரத்தம் சுத்தப்படுகிறது. குழந்தைக்கு தேவையான சத்தும் கிடைக்கிறது. ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க உதவுகிறது. மேலும் விபரங்களுக்கு தொடர்பு முகவரி : அ.வெங்கடேஷ், பயிர் நோயியல் துறை, த.வே. பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003

உளுந்து சாகுபடி: ஜீரோ பட்ஜெட் உளுந்து சாகுபடி பற்றி தஞ்சாவூர் மாவட்டம் புன்னைநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராமலிங்கம் தகவல் தருகிறார். தேர்வு செய்யப்பட்ட நிலத்தை இரண்டுசால் புழுதி உழவு செய்ய வேண்டும். 150 கிலோ கன ஜீவாமிர்தத்தை 200 லிட்டர்

ஜீவாமிர்தத்தில் கலந்து புட்டு பதத்திற்கு பிசைந்து வயல் முழுக்க பரவலாக தெளிக்க வேண்டும். கன ஜீவாமிர்தம் பறக்காமல் இருக்கவும் அதன் வீரியத்தை அதிகப்படுத்துவதற்கும் ஜீவாமிர்தத்தைக் கலந்து தெளிக்க வேண்டும். பின்பு 20 அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட பாத்திகள் அமைத்து 7 கிலோ ஆடுதுறை-5 ரக விதை உளுந்தை ஜீவாமிர்த கரைசலில் அமிழ்த்தி விதைநேர்த்தி செய்து, பரவலாக தெளித்து ரோட்டோ வேட்டர் மூலம் மேலோட்டமாக ஒரு சால் உழவு ஓட்ட வேண்டும். தொடர்ந்து காய்ச்சலும், பாய்ச்சலுமாக தண்ணீர் கட்டி வரவேண்டும். 7ம் நாள் 50 லிட்டர் ஜீவாமிர்தத்தை 80 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 15-ம் நாள் 5 லிட்டர் அக்னி அஸ்திரத்தை 120 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 35-ம் நாள் இதே அளவு ஜீவாமிர்தம் தெளிக்க வேண்டும். 45ம் நாள் 5லிட்டர் தேமோர்க்கரைசலை 115 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மாலை நேரங்களிலேயே தெளிக்க வேண்டும். 65 நாட்களில் உளுந்து அறுவடைக்கு வந்து விடும்.

ஜீவாமிர்தம்: பசுஞ்சாணம் 10 கிலோ, மாட்டுச் சிறுநீர் 10 லிட்டர், வெல்லம் 2 கிலோ, பயறு மாவு (உளுந்து, துவரை ஏதாவது ஒன்று) 2 கிலோ, தண்ணீர் 200 லிட்டர் ஒரு கைப்பிடி நிலத்தின் மண் சேர்த்து பிளாஸ்டிக் கேனில் 48 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிளாஸ்டிக் கேனை மரத்தின் நிழலில் வைக்க வேண்டியது முக்கியம். காலை, மதியம், மாலை என்று மூன்று முறை இதை கலக்கி விட்டு வந்தால் ஜீவாமிர்தம் தயார். இது ஒரு நாளுக்கான அளவு. இதை பயிர் வளர்ச்சி ஊக்கியாக பாசன நீரிலேயே கலந்து விடலாம்.

கன ஜீவாமிர்தம்: பசுஞ்சாணம் 100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயறு மாவு போதும். இதையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். கூடவே உப்புமா பதம் வருவதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு நாட்டு மாட்டுச் சிறுநீரை கலந்தால் போதும். பின்பு உருட்டி நிழலில் காயவைத்து தேவைப்படும் போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்.

இது மானாவாரி நிலங்களுக்கு ஏற்றது. மகசூல் ஏக்கருக்கு 5 குவிண்டால் உளுந்து ரூ.1 லட்சத்து 52 ஆயிரம் வருமானம் கிடைக்கும் என்றார் விவசாயி. தொடர்புக்கு : ராமலிங்கம், அலைபேசி : 78711 26888.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## கார்த்திகை, மார்கழி பட்ட சூரியகாந்தி சாகுபடி



கார்த்திகை பட்டத்தில் மானாவாரி பயிராக கோ.4, மார்டன் ஆகிய இரகங்களும் வீரிய ஒட்டு இரகங்களில் கே.பி.எஸ். எச்.1, கே.பி.எஸ்.எச்.44, டி.சி.எஸ்.எச்.1 ஆகியவை சூரியகாந்தி இரகங்களும் ஏற்றவை. மார்கழி பட்டத்தில் இறவைப் பயிராக பயிரிட கோ.4, மார்டன் ஆகிய இரகங்களும் வீரிய ஒட்டு இரகங்களில் கே.பி.எஸ்.எச்.1, கே.பி.எஸ்.எச்.44, எம்.எஸ்.எப். எச்.17 ஆகியவை ஏற்றவை.

விதையளவு : கிலோ / ஹெக்டேர்

இரகங்கள் - மானாவாரி 7, இறவை 6

வீரிய ஒட்டு இரகங்கள் - மானாவாரி 5, இறவை 4

விதை நேர்த்தி : ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டைசிம் அல்லது 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி கொண்டு பூஞ்சாண விதை நேர்த்தி செய்யவும். விதைப்பதற்கு முன் ஒரு ஹெக்டேருக்கான விதைகளை 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் 3 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா

கொண்டு விதை நேர்த்தி செய்து 15 நிமிடங்கள் நிழலில் உலர வைத்து விதைக்கவும்.

விதைப்பு : ஒரு குழிக்கு இரண்டு விதை என்ற அளவில் 3 செ.மீ. ஆழத்தில் பாரின் பக்கவாட்டில் விதைக்கவும். பின்பு 10-ஆம் நாள் செழிப்பாக உள்ள ஒரு செடியை நிறுத்தி, மற்றதை களைத்து விடவும்.

பயிர் இடைவெளி: வீரிய ஒட்டு இரகங்கள் - 60 செ.மீ. x 30 செ.மீ., இரகங்கள் - 45 செ.மீ. x 30 செ.மீ.

களை நிர்வாகம்: ப்ளுக்குளோரலின் விதைத்த 5 ஆம் நாள் அல்லது பென்டிமெத்தலின் விதைத்த 3 ஆம் நாள் 2 லிட்டர் / ஹெக்டேருக்கு தெளித்தபின் நீர் பாய்ச்சுதல் வேண்டும். களைக்கொல்லி இட்டபின் 30-35 ஆம் நாளில் ஒரு கை களை எடுக்க வேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாத நிலையில் விதைத்த 15 மற்றும் 30 ஆம் நாள் கை களை எடுக்க வேண்டும்.

உர நிர்வாகம்: ஹெக்டேருக்கு 12.5 டன் தொழு உரம் அடியுழவில் இடவும்.

இரசாயன உரங்களில் வீரிய ஒட்டு இரகங்களுக்கு இறவையில் ஹெக்டேருக்கு 60:90:60 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்தும் மானாவாரியில் ஹெக்டேருக்கு 40:50:40 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்தும் இடவும். இரகங்களுக்கு இறவையில் ஹெக்டேருக்கு 60:30:30 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்தும், மானாவாரியில் ஹெக்டேருக்கு 40:50:40 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்தும் இடவும்.

உயிர் உரம் இடுதல்: ஹெக்டேருக்கு 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் 10 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவை 25 கிலோ தொழு உரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து விதைக்கு முன் இடவும்.

நுண்ணூட்ட உரம் இடுதல்: எக்டேருக்கு 12.5 கிலோ சூரியகாந்தி நுண்ணூட்ட உரக் கலவையை 40 கிலோ மணலுடன் கலந்து

விதைப்பதற்கு முன் சாலில் இடவும். மணிகள் பிடிக்க பின்பற்ற வேண்டிய உத்திகள்: இடைக்கால பூக்கும் பருவத்தில் மகரந்த சேர்க்கைக்காக காலை 9.00 மணி முதல் 11.00 மணிக்குள் கையில் மெல்லிய துணி கொண்டு பூவின் மேல்பாகத்தை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மெதுவாக ஒவ்வொரு பூக்கொண்டையும் தேய்க்க வேண்டும். எட்டிலிருந்து பத்து நாட்களுக்கு ஐந்து முறை இவ்வாறு செய்ய வேண்டும். அல்லது அருகருகே உள்ள பூக்கொண்டைகளை ஒன்றோடு ஒன்று முகம் சேர்த்து இலேசாக தேய்க்க வேண்டும். ஹெக்டேருக்கு 5 தேனிப்பெட்டி வைப்பதால் மகரந்த சேர்க்கை ஏற்பட்டு விதை பிடிப்பு அதிகரிக்கும். கூடுதல் வருமானமும் கிடைக்கும்.**-பே.இந்திராகாந்தி, வேளாண்மை துணை இயக்குநர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், விநாயகபுரம்.**

## வெங்காய விலை குறைய வாய்ப்பு



புதுடில்லி:வெளிநாடுகளில் இருந்து, 250 டன் வெங்காயம், மும்பை துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. இதையடுத்து, வெங்காயத்தின் விலை, விரைவில் குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வெங்காயத்தின் விலை, சமீபகாலமாக அதிகரித்தது. வடமாநிலங்களில், ஒரு கிலோ

வெங்காயம், 60 ரூபாய் வரை விற்கப்பட்டது. விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில், பாகிஸ்தான், எகிப்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து, வெங்காயம் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. இதுகுறித்து, மத்திய உணவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை:மும்பை துறைமுகத்துக்கு, 250 டன் வெங்காயம் நேற்று வந்திறங்கி உள்ளது; இன்னும், 2,000 டன் வெங்காயம், இந்த வார இறுதிக்குள் வந்துவிடும். இதனால், வெங்காயத்தின் விலை, விரைவில் குறையும். இதேபோல், 3,223 டன் பருப்பு வகைகள், மும்பை, சென்னைக்கு ஏற்கனவே வந்துவிட்டன; மேலும், 2,000 டன் விரைவில் வந்துவிடும்.

## ராமநாதபுரத்தில் 50 ஆயிரம் டன் மிளகாய் சேமிக்க ரூ.4 கோடியில் குளிர்பதன கிடங்கு வரும் ஜனவரியில் திறப்பு

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டிற்கு 50 ஆயிரம் டன் வரை மிளகாய் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றை சேமித்து வைக்க ரூ.4 கோடியில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்படுகிறது.தமிழகத்தில் மிளகாய் உற்பத்தியில் ராமநாதபுரம் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. மாவட்டத்தில் 63 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி பரப்பு உள்ளது. பரமக்குடி, கமுதி, முதுகுளத்துார், கடலாடி, ஆர்.எஸ்.மங்கலம், ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் சாகுபடியாகிறது. ஆண்டிற்கு 50 ஆயிரம் டன் கிடைக்கிறது. ராமநாதபுரம், பரமக்குடி, ஆர்.எஸ்.மங்கலம், கமுதியில் விற்பனை சந்தைகள் உள்ளன. ஆனால் மிளகாயை சேமித்து வைக்க பரமக்குடியில் மட்டுமே தலா 100 டன் கொள்ளளவு உள்ள 2 குளிர்பதன கிடங்குகள் உள்ளன. இக்கிடங்குகளில் இல்லாமல் வெளியில் சேமித்த மிளகாய்வத்தல்கள் டன்கணக்கில் உடைந்து சேதமடைந்தன இதனால் வரத்து இல்லாத

காலங்களில் நல்லவிலையில் விற்கலாம் என நம்பியிருந்த விவசாயிகள், வியாபாரிகள் நஷ்டமடைந்தனர்.

இதையடுத்து ராமநாதபுரம் அருகே எட்டிவயலில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் சார்பில் ரூ.4 கோடியில் குளிர்பதன சேமிப்பு கிடங்கு அமைக்கப்படுகிறது. இதற்காக ராமநாதபுரம் மிளகாய்வத்தல் வியாபாரிகள் 2 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்தனர். இந்த கிடங்கில் 2 ஆயிரம் டன் வரை மிளகாய் சேமித்து வைக்கலாம். இவை 2 அடுக்காக கட்டப்படுகிறது. உலர் களமும் அமைக்கப்படுகிறது.தோட்டக்கலை துணை இயக்குனர் (பொ) இளங்கோ கூறுகையில், “குளிர்பதன சேமிப்புகிடங்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் கட்டப்படுகிறது. ஜனவரியில் திறக்கப்படும்,” என்றார்.

**பசுமைக்குடில் வெள்ளரியில் ஏழு மடங்கு லாபம்: உற்பத்தி அதிகரிக்க முடிவு**



திண்டுக்கல்:ஒரு ஏக்கரில் ஏழு மடங்கு லாபம் தரும் பசுமைக்குடில் வெள்ளரிக்காய் சாகுபடியை அதிகரிக்க வேண்டும் என, மாநில

தோட்டக்கலைத்துறை உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் கோவை, திண்டுக்கல், நீலகிரி உள்ளிட்ட இடங்களில் அதிகளவு பசுமைக்குடில் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது. திண்டுக்கல் காய்கறி மகத்துவ மையத்தில் பசுமைகுடிலில் 'ஹில்டன்' 'மல்டிஸ்கான்' ரகங்கள் சாகுபடியாகின்றன. உள்ளூர் வெள்ளரியை விட இந்தரக வெள்ளரி ரகங்களில் விதைகள் அதிகளவில் இருக்காது.இதனால், பெரிய வியாபார விடுதிகளில் ' சாலட்' செய்வதற்கு இவை பயன்படுத்தப்படுகின்றன. இதனால் வெளி மாநிலங்களுக்கும், கனடா, சிங்கப்பூர், மலேசிய நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒரு ஏக்கரில் உள்ளூர் வெள்ளரி 10 டன் சாகுபடியாகிறது. அதுவே, பசுமை குடிலில் வளர்க்கப்பட்ட 'ஹில்டன், மல்டிஸ்கான்' ரக வெள்ளரி ஏக்கருக்கு 80 டன் வரை காய்க்கும். விலை ரூ.20 முதல் ரூ.22 வரை விற்பனையாகிறது. இருந்தாலும் பசுமைகுடில் அமைக்க பணம் லட்சங்களில் செலவாவதால் அதிக விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே மாநில தோட்டக்கலைத்துறை பசுமைக்குடில் அமைக்க சதுர மீட்டருக்கு ரூ.468.50ம், குடில்களின் அமைப்பைப் பொறுத்து கூடுதலாகவோ, குறைவாகவோ மானியம் வழங்க முன்வந்துள்ளது. தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராமனாதன் கூறியதாவது: காய்கறி உற்பத்தியில் அதிகப்படியான லாபத்தை விவசாயிகள் பெற பசுமைகுடில் தொழில்நுட்பம் உதவுகிறது. தோட்டக்கலைத்துறை பசுமைகுடிலுக்கு மானியம் வழங்குகிறது. இந்த திட்டம் அனைத்து மாவட்ட தோட்டக்கலைத்துறைக்கும் விரிவாக்கப்பட உள்ளதால், விவசாயிகளுக்கு மானியம் அதிகளவில் கிடைக்கும். அதன் வாயிலாக உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது, என்றார்.

நீலகிரி முதலிடம்

காய்கறி மகத்துவ மைய உதவி இயக்குனர் சீனிவாசன்: தமிழகத்தில் தக்காளி, சம்பங்கி, கொய்மலர்கள், வெள்ளரி உள்ளிட்டவை அதிகளவில்

பசுமைகுடிலில் சாகுபடியாகிறது. இதில், நீலகிரியில் உற்பத்தியாகும் காய்கறிகள், மலர்கள், பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. உற்பத்தியிலும் தமிழகத்தில் நீலகிரி முதலிடத்தை தக்க வைத்துள்ளது, என்றார்.

### ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் உயிர் நண்டுகளின் விலை வீழ்ச்சி

ராமநாதபுரம்: தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் ஆண்டுக்கு 4 லட்சத்து 38 ஆயிரத்து 270 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் 86 ஆயிரத்து 857 டன் மீன்களை ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் பாக்ஜல சந்தி, மன்னார் வளைகுடா கடல் பகுதிகளில் பிடிக்கின்றனர். ராமநாதபுரத்தில் இருந்து ஆண்டுக்கு 46 ஆயிரம் டன் இறால், நண்டு, கணவாய் மீன்கள் பல்வேறு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் அந்நிய செலாவணி கிடைக்கிறது. 2015 ஜனவரியில் கிலோ ரூ.280க்கு விற்ற உயிர் நண்டு விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது கிலோவுக்கு ரூ.80 குறைத்து ரூ.200க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் மீனவர்களின் வருவாய் குறைந்துள்ளது.ஏற்றுமதி நிறுவனங்கள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து கடல் உணவு பொருட்கள் மூலம் லட்சக்கணக்கில் லாபம் ஈட்டுகின்றன. வருவாய் இழப்பை தடுக்கவும், கடல் உணவு பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

### பால் உற்பத்தி 2 கோடி லிட்டராக உயர்வு உற்பத்தியாளர்களுக்கு ரூ.2,628 கோடி இழப்பு

சேலம்:"பருவமழை காரணமாக, தீவனங்கள் தங்கு தடையின்றி கிடைப்பதால், பால் உற்பத்தி, 2.02 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது. "அதே நேரம், பால் கொள்முதல் விலை முறைப்படுத்தப்படாததால், உற்பத்தியாளர்களுக்கு, ஆண்டுக்கு, 2,628 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. "இதை தவிர்க்க, பாலை கொள்முதல் செய்து, பவுடராக மாற்றி, பள்ளி குழந்தைகளுக்கு வழங்க, அரசு முன்வர வேண்டும்," என, தமிழக பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கத்தின் பொதுச் செயலர் ராஜேந்திரன் தெரிவித்தார்.தமிழக அரசு தகவலின்படி, தமிழகத்தில், 2012-13ல், நாள் ஒன்றுக்கு, 1.54 கோடி லிட்டராக இருந்த பால் உற்பத்தி, நடப்பாண்டு ஆகஸ்டில், 2.02 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது. தென்மேற்கு பருவ மழை பரவலாக பெய்ததால், பசுக்களுக்கு, தங்கு தடையின்றி தீவனம் கிடைப்பதால், பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.ஆனாலும், ஆவின் நிறுவனம், நாள் ஒன்றுக்கு, 30 லட்சம் லிட்டர் பாலை மட்டுமே கொள்முதல் செய்கிறது. மீதம் உள்ள பாலை, தனியார் நிறுவனங்கள், குறைந்த விலைக்கு கொள்முதல் செய்கின்றன.

## தனி நபர் பயிர் காப்பீட்டு திட்டம்இரண்டு வாரத்தில் முடிவு?

சென்னை: 'தனி நபர் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்து, இரண்டு வாரத்தில் முடிவு எடுக்கப்படும்' என, சென்னை உயர் நீதிமன்றத்தில், மத்திய அரசு தெரிவித்தது.
தி.மு.க., முன்னாள் எம்.எல்.ஏ., அப்பாவு தாக்கல் செய்த மனு:பயிர் காப்பீட்டு திட்டத்தில், தற்போது, வாழை, தென்னை, கரும்பு, நெல் உட்பட, 20 வகையான பயிர்களை தான் சேர்க்க முடியும். 'வட்டார அளவில் மற்றும் ஐந்து கிராமங்கள் அளவில் பயிர் இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்' என்றும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு, வட்டாரம், குறு வட்டம்

என, கட்டுப்படுத்தாமல், இழப்பீடு வழங்க வேண்டும்.மேலும், தனிநபர் பயிர் காப்பீட்டு திட்டத்தை, சோதனை அடிப்படையில் அமல்படுத்த, தமிழக அரசு முடிவு செய்திருப்பதாகவும், மத்திய அரசு ஒப்புதல் கிடைத்த உடன் அமல்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது. இதுவரை, எந்த உறுதியான முடிவும் வெளிவரவில்லை. எனவே, எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல், தனிநபர் பயிர் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த, மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்.இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.மனு, தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல், நீதிபதி புஷ்பா சத்தியநாராயணா அடங்கிய, 'முதல் பெஞ்ச்' முன், விசாரணைக்கு வந்தது.அப்போது, மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'தனிநபர் பயிர் காப்பீட்டு திட்ட விவகாரத்தில், இரண்டு வாரத்தில் இறுதி முடிவு வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது," என்றார். இதையடுத்து, மனு மீதான உத்தரவு, நவ., 6ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

**மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர் : தமிழக நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், மேட்டூர் அணையின் நீர்வரத்து 7,299 கனஅடியிலிருந்து 18,899 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 69.57 அடியாகவும், நீர் இருப்பு 32.33 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**தக்காளிக்கு விலை இல்லை ரோட்டில் கொட்டும் அவலம்**



வேடசந்தூர் :தக்காளி வரத்து கூடுதலாக உள்ளதால், போதிய விலை இல்லாமல் நல்ல தக்காளிகளைக்கூட ரோட்டோரம் கொட்டும் அவலம் தொடர்கிறது.தற்போதும் தக்காளி வரத்து கூடுதலாகவே உள்ளது. முன்பு கிலோ ரூ.12 முதல் 15 வரை விற்ற தக்காளி இப்போது ரூ.5 வரை விற்கிறது. பன்னிரெண்டு கிலோ எடை கொண்ட பெட்டி ஒன்று ரூ.50 முதல் 60 வரை மட்டுமே போகிறது. ஒரு விவசாயி குறைந்தது ஐந்து பெட்டி

முதல் பத்து பெட்டிகள் வரை, தினமும் கடைக்கு கொண்டு வருகிறார். வேடசந்தூர் போன்ற நகர் பகுதிக்கு கொண்டுவந்து, சுங்கம், கமிஷன் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்களை செலுத்துவது மட்டுமின்றி, போக்குவரத்து சிரமத்தாலும் அவதிப்படுகின்றனர்.இதனால் ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகள் சாலையூர் நால்ரோட்டில் தக்காளி மண்டி செல்கின்றனர். இங்கு கூடுதலான தக்காளி வரத்து வருவதால் லேசாக கனிந்த பழங்களை கூட பொறுக்கி எடுத்து, ரோட்டோரம் வீணாக கொட்டுகின்றனர். இங்குள்ள ஒரு கடையில் இப்படி தொடர்ந்து கொட்டி வருகின்றனர். ரோட்டில் கொட்டும் நல்ல பழங்களை ஒரு பெட்டியில் போட்டு வைத்தால் தேவைப்படுவோர் எடுத்து செல்வரே என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

## முதலை பண்ணையை மேம்படுத்தனும்:சுற்றுலா பயணிகள் அதிகரிக்க வாய்ப்பு

உடுமலை ;உடுமலை அமராவதி முதலைப்பண்ணையை, வனத்துறை மேம்படுத்தினால், உள்ளூர் மக்கள் உட்பட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஆனைமலை புலிகள் காப்பகம், அமராவதி வனச்சரகத்தில் உள்ள முதலை பண்ணையில், நன்னீரில் வாழும், 99 முதலைகள் பராமரிக்கப்படுகின்றன. ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இப்பண்ணையை, உள்ளூர் மக்கள் உட்பட சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் பார்த்துச்செல்கின்றனர். நுழைவுக்கட்டணமாக, பெரியவர்களுக்கு, 10 ரூபாயும், சிறுவர்களுக்கு, ஐந்து ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. தவிர, 'பார்க்கிங்' கட்டணமாக, காருக்கு 20 ரூபாய், இருசக்கர வாகனத்திற்கு, 10 ரூபாய், பஸ்சுக்கு, 50 ரூபாய் பெறப்படுகிறது.

விடுமுறை நாட்களில் சராசரியாக, 150 முதல் 200 பேர் பார்வையிட்டு செல்வதால், 10 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது. இதர நாட்களில், இரண்டு ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைப்பதே அரிதாக உள்ளது.வனத்துறை ஊழியர்கள், ஏழு பேர் பண்ணையில் பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில், அருகில் மான், முயல் உள்ளிட்ட வன விலங்குகளுக்கான பூங்கா அமைத்தால், பார்வையாளர்களின் வருகையை அதிகரிக்க செய்ய முடியும். இதனால், வனத்துறைக்கு கணிசமான வருவாய் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

மேலும், நன்னீர் முதலைகளுக்கான பண்ணை குறித்த விழிப்புணர்வு, வனத்துறையால் ஏற்படுத்தப்பட வேண்டும். கடந்த சில ஆண்டுகளுக்கு, முன் சுற்றுலா பயணிகள் கவனத்தை ஈர்க்க, வனத்துறை சார்பில், முதலைப்பொங்கல் என்ற விழா கொண்டாடப்பட்டது. விழா குறித்த தகவல்கள், அனைத்து பகுதிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு, சுற்றுலா பயணிகள் அதிகளவு முதலை பண்ணைக்கு வந்து சென்றனர். இவ்விழா, ஓராண்டு மட்டும் நடத்தப்பட்டு, கைவிடப்பட்டது.

புலிகள் காப்பகம் சார்பில், ஆண்டுதோறும் விழாவை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினால், முதலைப்பண்ணை பராமரிப்பிற்கான, தொகையை கட்டண வசூலில் ஈடுகட்டலாம்.

பண்ணை வளாகத்தில், சாம்பல் நிற அணில்கள் வளர்ப்பிற்கான, முதற்கட்ட பணிகளும் துவங்கப்பட்டன. இத்தகைய கூடுதல் அம்சங்களை, அங்கு கொண்டு வந்தால், உள்ளூர் மக்களையும், எளிதாக ஈர்க்கலாம்.

'நடவடிக்கை எடுக்கப்படும்':வனத்துறையினர் கூறுகையில், 'முதலைப்பண்ணையில், சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அருகில், பூங்கா அமைத்தல் உட்பட பணிகளுக்கு, அரசுக்கு கருத்துரு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும்' என்றனர்.

**வேளாண் துறையில் இயந்திரமயமாக்கும் திட்டம் விரிவாக்கம்! மானிய விலையில் 91 இயந்திரங்கள் வழங்க முடிவு**

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில், வேளாண் துறையில் இயந்திரமயமாக்கும் திட்டத்தை விரிவாக்கம் செய்ய, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நடப்பாண்டு, மானிய விலையில், 91 இயந்திரங்கள் வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், 2.50 லட்சம் ஏக்கர் பரப்பளவில், நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது, விவசாய தொழிலாளர்களின் பற்றாக்குறையை சமாளிக்க, வேளாண் துறையில் இயந்திரமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும், மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இதன்படி, நடப்பாண்டு, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வேளாண் இயந்திரங்கள், மானிய விலையில் வழங்கப்பட உள்ளன. இயந்திரங்களின் வகை மற்றும் விலைக்கு ஏற்ப, 15 ஆயிரம் முதல், 2 லட்சம் ரூபாய் வரை, அரசு மானியம் வழங்குகிறது.அதில், 45 நெல் நடவு இயந்திரங்கள், 37 விதை விதைப்பு இயந்திரங்கள், ஒன்பது களை எடுக்கும் இயந்திரங்கள் என, 91 வேளாண் இயந்திரங்கள் வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, திருவள்ளூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆதித்தன் கூறியதாவது: வேளாண் துறையில், இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ், எங்கள் துறை மூலம், விவசாயிகளுக்கு, வேளாண் இயந்திரங்கள், மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு, ஏழு நெல் நடவு இயந்திரங்கள்; நான்கு விதை விதைப்பு இயந்திரங்கள்; 45 களை எடுக்கும் இயந்திரங்கள் என, 56 இயந்திரங்கள் வழங்கப்பட்டன.நடப்பாண்டு, நெல் நடவு இயந்திரங்களும், விதை விதைப்பு இயந்திரங்களும், கூடுதலாக வழங்கப்பட உள்ளன. விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு, முன்னுரிமை அடிப்படையில், இந்த

இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படும். எனவே, ஆர்வம் உள்ள விவசாயிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும், வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில், தங்களது விண்ணப்பங்களை உடனடியாக வழங்கி பயன் பெறலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

வேளாண் இயந்திரங்களும் மானியமும்

இயந்திரம் விலை மானியம் (விவசாயிகளின் வகைக்கு ஏற்ப)

நெல்நடவு (4 வரிசை) ரூ.2.5 லட்சம் ரூ.75 ஆயிரம் ரூ.94 ஆயிரம் ரூ.94 ஆயிரம்

நெல் நடவு (4 வரிசைக்கு மேல்,

8 வரிசைகள் வரை) ரூ.17 லட்சம் ரூ.2 லட்சம் ரூ.2 லட்சம் ரூ. 2 லட்சம்

நெல் நடவு (8 வரிசைகளுக்கு மேல்) ரூ.17 லட்சம் ரூ.2 லட்சம் ரூ.2 லட்சம் ரூ.2 லட்சம்

விதை விதைப்பு கருவி ரூ.65 ஆயிரம் ரூ.35 ஆயிரம் ரூ.44 ஆயிரம் ரூ.44 ஆயிரம்

களை எடுக்கும் கருவி ரூ.1 லட்சம் ரூ.15 ஆயிரம் ரூ.19 ஆயிரம் ரூ.19 ஆயிரம்

விண்ணப்பிக்கும் இடங்கள்:

உதவி செயற் பொறியாளர் அலுவலகம், திருவள்ளூர் - 97898 64292.

உதவி செயற் பொறியாளர் அலுவலகம், திருத்தணி - 98412 54495.

உதவி செயற் பொறியாளர் அலுவலகம், பொன்னேரி - 94427 24363.

**மணிமுக்தா அணை வறண்டதால் விவசாயிகள் கவலை**

தியாகதுருகம்:கோமுகி அணை நிரம்பியுள்ள நிலையில், மணிமுக்தா அணை மைதானம் போல் வறண்டு கிடப்பதால் ஆயக்கட்டு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கல்வராயன்மலையில் உற்பத்தியாகும் கல்படை ஆறு மேகம் நீர்வீழ்ச்சியாக சமதளத்தை அடைகிறது. இங்கிருந்து கோமுகி நதியாக உருவெடுக்கிறது. இவ்விடத்தில் இரு மலைகளுக்கு இடையே கோமுகி அணை கட்டடப்பட்டுள்ளது. கோமுகி மற்றும் மணிமுக்தா அணையில் தேக்கிவைக்கப்படும் தண்ணீரை பாசனத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் கள்ளக்குறிச்சி பகுதியில் விவசாயம் செழிக்க முக்கிய காரணமாக உள்ளது.இவ்விரு ஆறுகளும் 20 கி.மீ., தூர இடைவெளியில் உற்பத்தியானாலும் கோமுகி அணை ஆண்டுதோறும் நிரம்பி விடுகிறது. கடந்த 3 ஆண்டுகளாக மணிமுக்தா அணை நிரம்பாமல் போனதால் ஆயக்கட்டு விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மலையில் பெய்யும் நீர் சிற்றுறோடைகள் மூலம் ஆற்றில் கலந்தாலும், வரும் வழியிலேயே தண்ணீர் விரயமாவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். சமீபத்தில் சங்கராபுரம் அருகே 2 தடுப்பணைகள் மணி ஆற்றில் புதிதாக கட்டப்பட்டதால் அணைக்கு தண்ணீர் வராமல் தடைபட்டு நிரம்ப வழியின்றி போவதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக கல்வராயன் மலையில் கனமழை பெய்ததால் கோமுகி அணை நிரம்பி உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. ஆனால் மணிமுக்தா அணையின் நிலை பரிதாபமாக உள்ளது. கோடை காலத்தை போல் தண்ணீர் இன்றி புல்வெளி மைதனமாக காட்சியளிக்கிறது.

இதை நம்பியுள்ள 5,500 ஏக்கர் ஆயக்கட்டு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து 3 ஆண்டுகளாக அணை நிரம்பாததால், வயல்வெளிகள் கரம்பு நிலங்களாக மாறிவிட்டது.

அணைக்கு தண்ணீர் கொண்டுவரும் ஓடை, கால்வாய், வாய்க்கால்களை செப்பனிடுவதில் பொதுப்பணித்துறை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. மணிமுக்தா அணை ஆண்டுதோறும் நிரம்பாமல் போனதால் ஆயக்கட்டு விளைநிலங்கள் பிளாட்டுக்களாக மாறும் நிலை அதிகரித்து வருகிறது.

வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் அணையில் ஷெட்டர் அமைக்கப்பட்ட பகுதியில் 10 அடி அளவுக்கு மட்டுமே குட்டை போல் தண்ணீர் தேங்கியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் அணையில் மீன்பிடி திருவிழா நடந்தது. சிறுவர்கள் தண்ணீரில் நடந்து சென்று மீன் பிடித்ததை காண முடிந்தது. அந்த அளவுக்கு தண்ணீர் இன்றி அணை வறண்டு போய் கிடக்கிறது.

அணைக்கு தண்ணீர் கொண்டவரும் நீர்வழி ஆதாரங்களை செப்பனிட்டு புதுப்பிப்பதோடு, புதிய நீர்வழித்தடங்களை ஒருங்கிணைத்து கிடைக்கும்

மழைநீரை அணையில் தேக்க போதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மழை சேதத்தை கண்காணிக்க ஆயத்தம்!கட்டுப்பாட்டு அறை அமைப்பு

திருப்பூர்:வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் வெள்ள அபாயம் மற்றும் சேதத்தை, 24 மணி நேரமும் கண்காணிக்க ஏதுவாக, கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளன.

அக்., துவங்கி, டிச., மாதம் வரை பெய்யும் வடகிழக்கு பருவமழையே, தமிழகத்தின் நீராதாரங்களுக்கு கைகொடுக்கிறது. ஓடைகள், ஆறு ஓரமாக வசிப்போருக்கு, வெள்ள பாதிப்பு ஏற்பட வாய்ப்<பு உள்ளது.கடந்த சில நாட்களாக, தமிழகத்தின் பல்வேறு பகுதியில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. திடீரென மழைப்பொழிவு அதிகரித்தாலும்<, பேரிடர் மீட்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, வருவாய்த்துறை மூலம் கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்

பட்டுள்ளன. வடகிழக்கு பருவம் முடியும் வரை, 24 மணி நேரமும், மழைப்பொழிவு மற்றும் சேதத்தை கண்காணிக்க, சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை அதிகாரிகள் கூறுகையில்,"வடகிழக்கு பருவத்தில், மழைப்பொழிவு மற்றும் சேதங்களை கண்காணிக்க, 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளன. பகல் மற்றும் இரவு என, இரண்டு "ஷிப்ட்'டுகளாக பணியாளர்கள் கண்காணித்து வருவர்."மாவட்ட அளவில், பேரிடர் மீட்பு பிரிவில், 1077 என்ற கட்டணமில்லா எண்களுடன், கட்டுப்பாட்டு அறை செயல்பட துவங்கியுள்ளது. அத்துடன், தாலுகா வாரியாகவும், 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை செயல்பாட்டுக்கு வந்துள்ளது. எனவே,

மாவட்டத்தின் எப்பகுதியில் மழையால் பாதிப்பு ஏற்பட்டாலும், 1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்,' என்றனர்.

## சாதிக்கும் சென்னைவாசிகள்! மண்ணின்றி விளையும் சத்தான காய்கறிகள்!

சென்னை போன்ற பெருநகரங்களில், தற்போது மாடித் தோட்டத்தின் தேவை உணரப்பட்டு வருகிறது. அதேநேரம், தரையில், மண்ணின்றி வெறும் நீரை மட்டுமே கொண்டு காய்கறிகளை விளைய வைக்க முடியும் என, நிரூபித்துள்ளார், ஸ்ரீராம் கோபால், 32. கொட்டிவாக்கத்தில், 'பியூச்சர் பார்ம்ஸ்' என்ற நிறுவனத்தை உருவாக்கி, நீர்வழி விவசாயம் எனப்படும் 'ஹைட்ரோபோனிக்ஸ்' விவசாயம் செய்து வருகிறார் அவர்.

சுழற்சி முறையில்...

இதுகுறித்து, அவர் கூறியதாவது: நான், ஒரு பொறியாளர். ஒரு தனியார் நிறுவனத்தில் பெரிய பொறுப்பில் இருந்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன், 'யூ டியூப்'பில், 'ஹைட்ரோபோனிக்ஸ்' என்ற, வீடியோவை பார்த்தேன். அந்த வீடியோவில், குறைந்த இடப்பரப்பில், மண்ணின்றி, அடுக்கடுக்கான முறையில், காய்கறிகள் பயிரிடப்பட்டது, என்னை வெகுவாக கவர்ந்தது. என் தந்தையிடம் அனுமதி வாங்கி, பல்வேறு வீடியோக்கள், இணையதளங்கள் மூலம் 'ஹைட்ரோபோனிக்ஸ்' முறை பற்றி அறிந்து, செயலில் இறங்கினேன். குளிர்பிரதேசங்களில் செய்யப்படும் 'ஹைட்ரோபோனிக்ஸ்' முறையில், சென்னையில் விவசாயம் செய்தது சரியாக வரவில்லை. அதற்காக பல்வேறு வழிமுறைகளில் பரிசோதித்து தான், வெற்றி பெற முடிந்தது.

இந்த முறைக்கு, பி.வி.சி., குழாய்கள், பிளாஸ்டிக் வாளிகள், ஆயிரம்

டிகிரி பாரன்ஹீட்டில் கட்டிப்படுத்தப்பட்ட, எடை குறைந்த களிமண் உருண்டைகள், நுண்ணூட்டக் கரைசல், பயிர் பராமரிப்புக்கான கருவிகள், நீர் உந்தும் மோட்டார் உள்ளிட்டவை தேவைப்படுகின்றன. குறைவாக வேர்களை கொண்டு உள்ள குறுகிய கால பயிர்களான கீரைகள் உள்ளிட்டவற்றிற்கு, பி.வி.சி., குழாய் முறையிலும், ஆண்டு முழுவதும் வளரும் தாவரங்களுக்கு, வாளி முறையிலும், விவசாயம் செய்யலாம். குழாய் முறை விவசாயத்தில், உயர்தரமான பி.வி.சி., குழாய்களில் அருகருகே, வட்ட வடிவ ஓட்டைகள் இடப்பட்டு, அவற்றில் களிமண் உருண்டைகள் நிரப்பிய, சிறிய சல்லடை வடிவ வாளிகள் இடப்படுகின்றன. அவற்றில் விதைகள் இடப்படுகின்றன.

குழாய்களில், நுண்ணூட்டக் கரைசல், மோட்டாரால் பம்ப் செய்யப்பட்டு, சுழற்சி முறையில், குறைந்த வேகத்தில் செல்கிறது. ஆண்டு தாவர இலைகளின் ஈரத்தன்மை பாதிக்கப்படாமல் இருக்க, சொட்டு நீர் பாசன முறையில், நீர் தெளிக்கப்படுகிறது. வாளி முறை விவசாயத்தில், வாளியின் மையப்பகுதில் வட்ட வடிவ ஓட்டை இடப்பட்டு, அதில், சற்றே பெரிய சல்லடை வாளி வைக்கப்படுகிறது. அதில், நிரப்பப்பட்டுள்ள களிமண் உருண்டைக்கு இடையே செடி வைக்கப்படுகிறது. பயிர்களின் வேர், சல்லடை வாளிகளில் உள்ள ஓட்டைகள் வழியே, சுழற்சி முறையில் உள்ள நுண்ணூட்டத்தை கவர்கின்றது. அதனால், மண்ணில் வளர்வதை விட, வேகமாகவும், செழிப்பாகவும் பயிர்கள் வளர்கின்றன. மிளகாய், தக்காளி, புதினா, கீரை வகைகள் உள்ளிட்டவற்றை இதில் பயிர் செய்ய முடியும்.

வியாபாரத்திற்கு பயன்படும்வியாபார யுக்தியில் பயன்படுத்துவோருக்கும், சொந்த தேவைக்காக பயன்படுத்துவோருக்கும் ஏற்ற முறைகளில் இதில், தனித்தனி தொழில்நுட்ப அமைப்புகள்

உள்ளன. வீடுகளின் முற்றங்கள், மொட்டை மாடிகளில் இந்த விவசாயத்தின் மூலம், கொத்தமல்லி, புதினா உள்ளிட்ட வாசனை பயிர்களை வளர்ப்பதால், இடம் அழகு பெறுவதோடு, பயன்பாடும் அதிகரிக்கிறது. நிலம் வாங்கி விவசாயம் செய்வதை விட, ஒரே ஒருமுறை வாங்கப்படும், பி.வி.சி., குழாய் அமைப்பு, வாளி அமைப்பு, களிமண் உருண்டைகளை கொண்டு, ஒவ்வொரு ஆண்டும், நுண்ணூட்டங்களையும், பயிரையும் மாற்றி விவசாயம் செய்து, லாபம் பார்க்க முடியும். தொடர்புக்கு: 98404 32029

## கோமுகி அணை உபரி நீர் வெளியேற்றம்

கச்சிராயபாளையம்:கோமுகி அணையிலிருந்து நேற்று முன்தினம் இரவு முதல் ஆற்று வழியாக உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.கச்சிராயபாளையம் அடுத்த கல்வராயன்மலையில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மலை பகுதியில் பெய்யும் மழை நீர் முழுவதும் கல்படை, பொட்டியம், பரங்கிநத்தம் ஆகிய ஆறுகளின் வழியாக மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணைக்கு வந்து, தேங்கி நிற்கிறது.இதனால் கோமுகி அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது. அணையின் மொத்த கொள்ளவான 46 அடியில்( 561 மில்லியன் கன அடி) 44 அடி வரை(536 மில்லியன் கன அடி) இருப்பு வைத்து, அணையின் பாதுகாப்பு கருதி, உபரி நீர் ஆற்று மதகு வழியாக வெளியேற்றப்படும்.இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு கல்வராயன் மலையில் பெய்த கன மழையின் காரணமாக அணையின் நீர் மட்டம் முழு கொள்ளவை எட்டியுள்ளது.

இதனால் நேற்று முன்தினம் இரவு முதல் ஆற்று வழியாக சாரசரியாக வினாடிக்கு 500 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

தொடர்ந்து அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளதால் நேற்று காலை முதல் வெளியேற்றும் உபரி நீரின் அளவு 200 கன அடியாக குறைக்கப்பட்டது.

தொடர்ந்து கல்வராயன் மலை மற்றும் கச்சிராயபாளையம் சுற்றியுள்ள பகுதியில் நேற்று பகல் பொழுதுகளில் அவ்வப்போது மழை பெய்து வருவதால், கோமுகி அணை உதவி செயற்பொறியாளர் பிரபு தலைமையிலான ஊழியர்கள் தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

### நாமக்கல் மாவட்டத்தில் திடீர் கனமழை

நாமக்கல்: மாவட்டம் முழுவதும், நேற்று மாலை திடீரென கனமழை பொழிந்ததால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. ஒரு மணி நேரம் நீடித்த மழை, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் நகரில் கடும் வெயில் வாட்டியது. இந்நிலையில், நேற்று மாலை, 5 மணிக்கு திடீரென வானில் கருமேகம் சூழ்ந்தது. அதை தொடர்ந்து கனமழை பெய்தது. ஒரு மணி நேரம் நீடித்த மழையால், நகரில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. பகலில் கடும் வெயில் வாட்டிய நிலையில், திடீரென பெய்த மழையால், சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதேபோல், மாவட்டத்தில் ராசிபுரம், மோகனூர், திருச்செங்கோடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதிகளிலும் நேற்று மாலை கனமழை பெய்தது. திடீர் மழையால், பள்ளியை விட்டு வீட்டுக்குத் திரும்பிய மாணவர்கள் மழையில் நனைந்தபடி சென்றனர்.

### மழையால் 5,000 வாழைகள் நாசம்



கோபி: பலத்த மழையால், கோபி மற்றும் சுற்று பகுதியில், 5,000க்கும் மேற்பட்ட வாழைகள் சாய்ந்து நாசமாகின. ஈரோடு மாவட்டம் கோபி மற்றும் சுற்றுப்பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, எலந்தகுட்டை மேட்டில், 138 மி.மீ., சத்தியமங்கலம், 6.2, கவுந்தப்பாடி, 28, கோபியில் அதிகபட்சமாக, 58.2 மி.மீட்டர் மழை பதிவானது. நேற்றும் தொடர்ந்து மழை பெய்தது. கோபி அவ்வையார் பாளையம், செல்லிபாளையம், வேட்டைக்காரன்கோவில் உள்ளிட்ட பகுதியில் பெய்த மழையால், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் சாகுபடி செய்திருந்த வாழை மரங்கள், வேருடன் சாய்ந்தன. கதளி, மொந்தன், ரொபஸ்டா உள்ளிட்ட வாழை ரகங்கள், காற்றுக்கு பாதியுடன் முறிந்து விழுந்தன. அவ்வையார்பாளையத்தை சேர்ந்த கார்த்திக் என்ற விவசாயிக்கு சொந்தமான மொந்தன் வாழை மரங்கள், களப்பாறை தோட்டத்தை சேர்ந்த தங்கவேல் என்ற விவசாயிக்கு சொந்தமான, 300 வாழை, செல்லிபாளையம் பொரசக்காட்டு தோட்டம், ஆண்டமுத்து என்பவரின், 850 கதளி வாழைகள், குள்ளந்தோட்டத்தை சேர்ந்த மூர்த்தி என்பவரின், 700 வாழைகள், கெலக்காட்டு தோட்டம் பாலுவின், 200 வாழைகள் சாய்ந்தன. இதேபோல் இப்பகுதியில், ஐந்துக்கு மேற்பட்ட மின்கம்பங்கள்

சாய்ந்து, மின் தடை ஏற்பட்டது. இதுபற்றி பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், 'வாழை விவசாயத்தை பொறுத்தவரை, ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை முதலீடு செய்து, சாகுபடி செய்கிறோம். பாதிக்கப்பட்ட எங்களை போன்ற வாழை விவசாயிகளுக்கு, அரசு இழப்பீடு வழங்க வேண்டும். வாழை விவசாயிகளுக்கு, பயிர் காப்பீடு திட்டத்தை அமல்படுத்த வேண்டும்' என்றனர்.

### எலந்தகுட்டைமேட்டில் மழை: அதிகபட்சம் 138 மி.மீ., பதிவு

ஈரோடு: கோபி அருகேயுள்ள எலந்தகுட்டை மேட்டில் அதிகபட்ச மழையளவு பதிவானது. மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலான மழை அவ்வப்போது பெய்து வருகிறது. பவானிசாகர் அணை நீர்மட்டம், 64.65 அடியாக உள்ளது. அணைக்கு, 1,517 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது. ஆற்றில் தண்ணீர் விடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. வாய்க்காலில் நீர் வினியோக அளவு குறைக்கப்பட்டுள்ளது, 1,800 கன அடி வீதம் தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது. மாவட்டத்தில் பெய்த மழையளவு விவரம் மி.மீ: பவானி சாகர், சத்தியமங்கலம், 6.2, கோபி, 58, கொடிவேரி, 17, எலந்தகுட்டை மேடு, 138, கவுந்தப்பாடி, 28.2, பெருந்துறை 26.1, பவானி, 21.2, ஓலப்பாளையம், 43, புங்கம்பாடி, 22.6, ஈரோடு, 45, மொடக்குறிச்சி, 28, அரச்சலூர், 42, சென்னிமலை, 66, சிவகிரி, 17, முத்தூர், 21, மங்களப்பட்டி, 17, கொடுமுடி, 5, வெள்ளகோவில், 9.8, காங்கேயம், 2, ஒரத்துப்பாளையம், 7 என பதிவானது. நேற்று மாலையிலும் பரவலாக மழை பெய்தது.

## வேளாண்மை துறை சார்பில் 10,000 மண் மாதிரி சேகரிப்பு

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், நடப்பாண்டில், 10,000 மண் மாதிரிகள் சேகரித்து, பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில், 25 ஏக்கர் விளை நிலங்களுக்கு, ஒரு மண் மாதிரி சேகரிக்கப்பட்டு, கோவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அம்மண்ணின் தரம், எந்தெந்த பயிருக்கு, என்ன உரம், எவ்வளவு இட வேண்டும் என்பது குறித்து, விவசாயிகளுக்கு பரிந்துரை வழங்கப்படுகிறது. இதன்படி, ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டு, 10,000 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இதில், 1,500 மாதிரிகளுக்கு முடிவு அறிவிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வேளாண் இணை இயக்குனர் கார்த்திகேயன் கூறியதாவது: வேளாண் சாகுபடி பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கவும், என்னென்ன பயிருக்கு என்னென்ன உரங்கள், எப்போது இட வேண்டும், எந்த மண்ணுக்கு, எந்த பயிர் ஏற்றது என்பது குறித்து, மண் பரிசோதனை முடிவு மூலம், வேளாண் துறை யோசனை தெரிவிக்கிறது. இவ்வாறு பரிந்துரை வழங்கும்போது, அம்மண்ணின் தன்மைக்கு தேவையான நுண்ணூட்ட உரத்தை மட்டும் வழங்கினால், அதிக மகசூல் பெறலாம். இதன்படி, கடந்த மூன்றாண்டுகளில், 14 ஆயிரம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 10,000 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, தற்போது, 1,500 மாதிரிகளுக்கு முடிவும், அதற்கான பரிந்துரையும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## இறக்குமதியால் தேயிலைக்கு விலை வீழ்ச்சி இல்லை:வாரிய செயல் இயக்குனர் 'பளீச்'

கூடலுார்:'தேசிய அளவில் நடக்கும் தேயிலை உற்பத்தியில், சிறு விவசாயிகளின் பங்கு, 50 சதவீதமாக உயர வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.கூடலுார், தர்மகிரி-சலிவயல் சிறு தேயிலை விவசாயிகள் சங்கத்தின், 9ம் ஆண்டு விழா தர்மகிரியில் நடந்தது. சங்க இயக்குனர் அருட்தந்தை பினோய் வரவேற்றார். சங்க தலைவர் பிஜூ தலைமை வகித்தார்.விழாவில் பங்கேற்ற, குன்னுார் தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராஜ் பேசியதாவது:

இந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலை துாளில், 30 சதவீதம் வரை சிறு விவசாயிகளின் பங்கு உள்ளது. இதனை, 50 சதவீதமாக உயர்த்த வேண்டும். தேயிலை, இறக்குமதியால் தான் இங்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது என்பதை ஏற்க முடியாது. நம் நாட்டில், மிக குறைந்த அளவே தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது; அதற்கும் எந்த சலுகையும் வழங்கப்பட வில்லை. தரமான தேயிலை உற்பத்தி செய்வதன் மூலம், நல்ல விலை கிடைக்கும்.எதிர்கால திட்டத்துடன், தேயிலையை உற்பத்தி செய்தால் இது சாத்தியமாகும். புதிய வகை தேயிலை உற்பத்தியிலும் ஈடுப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையை தேயிலை வாரியம் மேற்கொண்டுள்ளது. தரமற்ற தேயிலைக்கு நல்ல விலை எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு பால்ராஜ் கூறினார்.விழாவில், சிறு தேயிலை விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஷாஜி, செயலர் ரிச்சர்ட் உட்பட பலர் பங்கேற்றனர்.சங்க செயலர் பினுஜோசப் நன்றி கூறினார்.

## மாவட்டம் முழுவதும் மழை: மகிழ்ச்சியில் விவசாயிகள்

கரூர்: கரூரில், நேற்றும் தொடர்ந்து மழை பெய்தது. கரூரில், கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. மானாவாரி நிலங்களில் உழவுப்பணி தீவிரமாக நடக்கிறது. மழையின் காரணமாக, கால்நடைகளுக்கான தீவனம் அதிகளவில் கிடைக்க துவங்கி உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று மாலை 4.30 மணி அளவில் மழை பெய்தது. அரை மணி நேரம் நீடித்த மழையால் சாலைகளில் தண்ணீர் ஓடியது. தொடர்ந்து மழை பெய்வதால் வெப்பத்தின் தாக்கம் குறைந்துள்ளது. நேற்று முன்தினம் மாவட்டம் முழுவதும் மொத்தம், 68 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. அரவக்குறிச்சி 9 மி.மீ., க.பரமத்தி 10.60, குளித்தலை 1, மாயனூர் 2, கரூர் 3.60, அணைப்பாளையம் 10, தோகைமலை 15, பஞ்சபட்டி 3, பாலவிடுதி 2.10, கடவூர் 5.20, கிருஷ்ணராயபுரம் 1.50, மைலம்பாடி5 மி.மீ., மழை பெய்தது.

## தாண்டிக்குடியில் பலத்த மழை

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மற்றும் பண்ணைக்காடு, தடியன்குடிசை அதனைச் சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் நேற்று மதியம் முதல் பலத்த மழை கொட்டித் தீர்த்தது.நேற்று காலையில் சுட்டெரிக்கும் வெயில் நீடித்தது. தொடர்ந்து 11 மணியிலிருந்து சாரல் மழை பெய்த நிலையில் மதியம் 2 மணி முதல் கனமழை பெய்யத் தொடங்கி மாலை 5.30 மணி வரை வெளுத்து வாங்கியது. விவசாயப் பணிக்கு சென்றோர் தோட்டங்களில் முடங்கியும், பள்ளி மாணவர்கள் மழையில் நனைந்தபடி வீடு திரும்பினர். மருதாநதி ஆற்றில் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. ரோட்டில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

வாகனங்கள் முகப்பு விளக்கை எரிய விட்டு சென்றன. தொடர்மழையால் தாழ்வான பகுதியில் பயிரிட்ட பீன்ஸ் செடிகள் தண்ணீர் சூழ்ந்து பூஞ்சான தாக்குதல் ஏற்படும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## பசுமை கூடார வெள்ளரிசாகுபடியை கலெக்டர் ஆய்வு

வடமதுரை,: வடமதுரை வட்டாரம் சூடாமணிப்பட்டியில் பசுமை கூடாரத்தில் வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டுள்ளதை திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் ஹரிகரன் நேற்று ஆய்வு செய்தார். அவரிடம், பசுமை கூடாரத்தில் வெள்ளரி சாகுபடி செய்துள்ள விவசாயி ரமேஷ் கூறியதாவது: 4000 சதுர மீட்டர் பரப்பில் பசுமை கூடாரம் அமைக்க ரூ.35 லட்சம் செலவானது. தோட்டக்கலை மூலம் சதுர மீட்டருக்கு ரூ.468.50 வீதம், ரூ.18.74 லட்சம் மானியம் வழங்கப்பட்டது. 20 மெட்ரிக் டன் மகசூல் கிடைத்துள்ளது. கிலோ ரூ.25 முதல் 30 வரை விலை போகிறது. 20 டன்னிற்கு ரூ.5.50 லட்சம் மூன்று மாதங்களில் கிடைக்கிறது. தற்போது எந்த கால நிலையிலும் பயிர் வளர்கிறது. உள்புறம் தேவைகேற்ப சீதோஷ்ண நிலையை மாற்ற கூடிய வசதி உள்ளது. துவக்கத்தில் செலவு கூடுதலாக இருந்தாலும், செலவிட்ட தொகையை ஓராண்டில் பெற்றுவிடலாம். நிரந்தரமான மகசூல் கிடைக்கும்' என்றார். ஆய்வின் போது தோட்டக்கலை இயக்குனர் ராமநாதன், உதவி இயக்குனர் கணேசன் உடனிருந்தனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## 2 ஆயிரம் டன் துவரம் பருப்பு இறக்குமதி: மத்திய அரசு முடிவு

தேவையான பருப்பு இருப்பை பராமரிக்கும் வகையில், 2 ஆயிரம் டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தில்லியில் திங்கள்கிழமை இரவு நடைபெற்ற "விலைகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான அமைச்சர்கள் குழுவின்' ஐந்தாவது கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இதுதொடர்பாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பது: பருப்புகள், வெங்காயம் ஆகியவற்றின் இருப்பு நிலவரம் மற்றும் அவற்றின் நடப்பு விலைகள் குறித்து கூட்டத்தில் அமைச்சர்கள் குழு மீளாய்வு செய்தது. மேலும், இறக்குமதி செய்யப்படும் பருப்புகள், வெங்காயத்தின் வரத்து, அவற்றின் விநியோக நிலவரம் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. முக்கிய மண்டிகளில் இரு வாரங்களாக வெங்காயம் விலை குறைந்திருப்பதையும் அமைச்சர்கள் குழு கவனத்தில் எடுத்துக் கொண்டது. முதல் கட்டமாக 250 டன் வெங்காயம் ஏற்கெனவே மும்பை ஜேஎன்பிடிக்கு இறக்குமதியாகிவிட்டது. வாரத்தின் இறுதியில் மொத்த அளவான 2 ஆயிரம் டன் வெங்காயம் வந்துவிடும். பருப்பை பொருத்தமட்டில், 3,233 டன் பருப்பு வகைகள் ஏற்கெனவே மும்பை, சென்னைக்கு வந்துவிட்டன. அக்டோபர் 20-ஆம் தேதிக்குள் ஒட்டுமொத்த அளவான 5 ஆயிரம் டன் பருப்புகள் இறக்குமதியாகிவிடும். இந்த இறக்குமதியாகும் பருப்புகள், வெங்காயம் அந்தந்த மாநிலங்களின் தேவைக்கு ஏற்ப ஒதுக்கப்படும். இதன்மூலம் அவற்றின் விலைகள்

குறைவதற்கு வாய்ப்பு உருவாகும். பருப்புகளின் விலைகளைக் கட்டுக்குள் கொண்டு வரவும், இருப்பை மேம்படுத்தவும் மேலும் 2 ஆயிரம் டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்வதற்கு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டக்கலை விவசாயிகளுக்கு ரூ.22 கோடியில் மானியத் திட்டங்கள்: ஆட்சியர்

தோட்டக்கலை விவசாயிகளை ஊக்குவிக்க, பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.22 கோடியில் மானியம் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தெரிவித்தார்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆட்சியர் த.ந.ஹரிஹரன் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். வேடசந்தூர் வட்டம், பாடியூர் மற்றும் தொட்டணம்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பசுமைக்குடில் திட்டத்தினை ஆய்வு செய்த பின் அவர் தெரிவித்தது:

திண்டுக்கல் மாவட்டத்தில், பழம் மற்றும் காய்கறி பயிர்கள், மலைத்தோட்ட பயிர்கள், மருத்துவ பயிர்கள், மலர் சாகுபடி என சுமார் 69,736 ஹெக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 40 முதல் 50 சதவீதம் வரை மானியம் வழங்கி, பயிர் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பசுமைக்குடில் சாகுபடி,

இயற்கை விவசாயம், பயிர் பாதுகாப்பு கருவிகள் வழங்குதல் உள்ளிட்ட திட்டங்கள் ரூ.4.18 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளன.

மேலும், புதிதாக 1120 ஹெக்டேர் பரப்பில் மா, கொய்யா, திராட்சை, எலுமிச்சை, கோகோ, மலர்கள், வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை சாகுபடி செய்ய பரிந்துரை செய்யப்பட உள்ளது. அதேபோல், சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு, அதிக இடைவெளி பயிர்களுக்கு ரூ.2.21 கோடி, குறைவான இடைவெளி பயிர்களுக்கு ரூ.5.76 கோடி என மொத்தம் ரூ.7.98 கோடிக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புறநகர் எல்லை காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ரூ.2.46 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய மருத்துவ இயக்கத் திட்டத்தின் கீழ், ரூ.41.59 லட்சம் மதிப்பீட்டில் 50 ஹெக்டேரில் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

அந்தந்த பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு, அரசுத் தரப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மானியத் திட்டங்களை அறிந்து விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்றார் அவர்.

ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் வீ.ரெ.வீரபத்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராமநாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இ.சாலிதளபதி ஆகியோர் உடனிருந்தனர்.

## வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தரை தேர்வு செய்யும் பணி தீவிரம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக புதிய துணை வேந்தரை தேர்வு செய்யும் பணி தீவிரமடைந்துள்ளது.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 10-ஆவது துணை வேந்தராக கடந்த 2012 ஆகஸ்ட் மாதம் பொறுப்பேற்ற முனைவர் கு.ராமசாமி, கடந்த ஆகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றார். இதையடுத்து பல்கலைக்கழக விதிகளின்படி புதிய துணை வேந்தரை தேர்வு செய்வதற்கு மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும்.

அவர்கள் பரிந்துரைக்கும் மூன்று நபர்களில் ஒருவர் துணை வேந்தராகத் தேர்வு செய்யப்படுவது வழக்கம். அதன்படி, வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு புதிய துணை வேந்தரை தேர்வு செய்வதற்கான குழுவை அரசு அமைத்துள்ளது. பல்கலைக்கழக வேந்தரும், ஆளுநருமான ரோசய்யா சார்பில் நியமிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.என்.வேதநாராயணன், இந்த குழுவின் தலைவராக இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழு சார்பில் சன் அக்ரோ பயோடெக் ஆய்வு மையத்தின் இயக்குநர் சீனிவாசன் சித்தானந்தமும், பல்கலைக்கழக கல்வி அலுவல் குழு சார்பில் தில்லி ஐ.சி.ஏ.ஆர். இயக்குநர் எஸ்.அய்யப்பனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து புதிய துணை வேந்தரை தேர்வு செய்யும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. புதிய துணை வேந்தர் பதவிக்கு பல்கலைக் கழகத்தின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் இயக்குநர்கள், விரிவாக்க மையங்களில் பணியாற்றும் இயக்குநர்களின் பெயர்களும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், ஓய்வு பெற்ற துணை வேந்தர் ராமசாமியையே மீண்டும் பரிந்துரைக்கக் கூடும் என்றும் பல்கலைக்கழக வட்டாரத்தில் பேசப்படுகிறது.

**வன உயிரின பாதுகாப்பு வார விழா**

உடுமலையை அடுத்துள்ள பூலாங்கிணறு அரசு மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் வன உயிரின பாதுகாப்பு வார விழா, டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் எம்.அக்பர் தலைமை வகித்தார். ஆசிரியர் கு.தமிழ்மணி "வன விலங்கு பாதுகாப்பும், மனித மோதல்களும்' என்ற தலைப்பில் பேசினார்.

என்எஸ்எஸ் அலுவலர் செ.சரவணன், "டெங்கு காய்ச்சல் பரவும் முறைகளும், அதைத் தடுக்கும் வழி முறைகளும்' என்ற தலைப்பில் பேசினார்.

இதையொட்டி, ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவை நடைபெற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளி வளாகத்தில் 25 மரக்கன்றுகள் நடப்பட்டன. ஆசிரியர் சந்திரகாந்தி நன்றி கூறினார்.

### தாளவாடியில் தொடர் மழை: நிரம்பும் வனக்குட்டைகள்

தாளவாடி வனப் பகுதியில் பெய்து வரும் மழைக் காரணமாக வனக்குட்டைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

சத்தியமங்கலத்தை அடுத்த தாளவாடி வனப்பகுதி ஆசனூர், தலைமலை, கோடிபுரம், ராமரணை, காளிதிம்பம், எர்ரணஹள்ளி, திகனாரை உள்ளிட்ட பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், வன அருவிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், முதியனூர், சிக்கஹள்ளி தடுப்பணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. வனக்குட்டைகளிலும் நீர் நிரம்பி வருகிறது. இதனால்,

வனவிலங்குகள் குடிநீர், உணவு தேடி கிராமங்களுக்குள் நுழைவது குறையும் என அப்பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## வேளாண் இயந்திரங்களை மானிய விலையில் விவசாயிகள் பெறலாம்: ஆட்சியர் தகவல்

வேளாண் இயந்திரங்களை மானிய விலையில் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் செவ்வாய்க்கிழமை விடுத்த செய்தி:

ஈரோடு மாவட்டத்தில் வேளாண் பணிகளுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களை தமிழக அரசு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. வேளாண் இயந்திரமயமாக்குதல் உபஇயக்கத்தின் மூலமாக 2015-16--ஆம் ஆண்டில் உழுவை இயந்திரம், பவர் டில்லர், ரொட்டாவேட்டர் மற்றும் பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் உள்ளிட்ட அனைத்து வகையான விவசாய இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளுக்கு மானியத்துடன் வழங்கப்பட உள்ளன.

ஈரோடு வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, 73-ஜெயபாரதி மஞ்சள் கிடங்கு, மஞ்சள் வளாகம், நசியனூர் சாலை, நசியனூர் அஞ்சல், செம்பாம்பாளையம், ஈரோடு-638107, தொலைபேசி எண் 0424-2555011 என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

கோபி வருவாய்க் கோட்ட விவசாயிகள், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), 31-ஏ, தெற்கு பூங்கா வீதி, கோபி, தொலைபேசி எண் 04285 - 229159 என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம். மேலும், கூடுதல்

விவரங்களுக்கு, மாவட்ட நிலை அலுவலகமான செயற்பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை, எச்-32, பெரியார் நகர்,

ஈரோடு-638 009, தொலைபேசி எண் 0424-2262067 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**உருளைக்கிழங்கு விலை கடும் வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

உருளைக்கிழங்கு விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக காய்கறிகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. நீராதாரம் உள்ள நிலங்களில் உருளைக்கிழங்கு, காரட், பீட்ரூட், பீன்ஸ், முட்டைகோஸ் உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

பருவம் கடந்து பெய்து வரும் மழை, வறட்சி, வன விலங்குகளின் தொல்லை, இடுபொருள்களின் விலையேற்றம், தொழிலாளர்களின் கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைக்களுக்கிடையிலேயே விவசாயிகள் உருளைக்கிழங்கு சாகுபடி செய்துவருகின்றனர்.

கோத்தகிரியில் நெடுகுளா, குண்டாடா, சுள்ளிக்கூடு, மசக்கல், கூக்கல்தொரை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலையில், தற்போது பெய்து வரும் மழை நீடித்தால் அறுவடைக்கு தயாராக உள்ள உருளைக்கிழங்குகள் அழுகும் நிலை ஏற்படும்.

எனவே, கடந்த 2 வாரங்களாக விவசாயிகள் உருளைக்கிழங்கை அறுவடை செய்து வருகின்றனர். 45 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ரூ. 1,200 முதல் ரூ. 1,500 வரை விலை கிடைத்து வந்த உருளைக்கிழங்கிற்கு,

தற்போது மேட்டுப்பாளையம் மண்டிகளில் ரூ. 700 முதல் ரூ. 800 வரை மட்டுமே விலை கிடைக்கிறது.

இதில், மண்டி கமிஷன், லாரி வாடகை, ஆள் கூலி என ஒரு மூட்டைக்கு ரூ. 300 வரை செலவாகிறது. இதனால், ஒரு கிலோ உருளைக்கிழங்கிற்கு சராசரியாக ரூ. 12 மட்டுமே விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இது கடும் நஷ்டத்தையே ஏற்படுத்தும் என்பதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, உருளைக்கிழங்கிற்கு கட்டுபடியான விலை கிடைக்கும் வரை அறுவடை செய்த கிழங்குகளை விற்காமல் விவசாயிகள் கிடங்கில் சேமித்து வைத்துள்ளனர்.

## விதைப் பரிசோதனை நிலையத்தில் இயக்குநர் ஆய்வு

வேலூரில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை ஆய்வகத்தை கோவை விதைச் சான்று, அங்ககச் சான்று இயக்குநர் ர.ஜெயசுந்தர் திடீர் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, வேலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் அ.இளையராஜா ஆய்வகப் பணிகள் குறித்து விளக்கினார். ஆய்வகத்துக்கு விதை ஆய்வு துணை இயக்குநரிடம் இருந்து ஆய்வாளர் விதை மாதிரி 849-ம், விவசாயிகள், விநியோகஸ்தர்களிடம் இருந்து பணி விதை மாதிரிகள் 266-ம், விதைச் சான்று உதவி இயக்குநரிடம் இருந்து 55 விதை மாதிரிகளும் உள்பட 1,170 விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு தரம் கண்டறியப்பட்டது என இயக்குநரிடம் தெரிவிக்கப்பட்டது.

காப்பு விதை மாதிரிகளில் இருந்து காலாவதியான சான்று விதை மாதிரிகள் 793-ம், ஆய்வாளர் விதை மாதிரிகள் 639-ம், பணி மாதிரி

விதைகள் 143-ம் இயக்குநரின் முன்னிலையில் குழியிலிட்டு அழிக்கப்பட்டன.

இந்த ஆய்வின்போது, காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் ஹேமேந்திரகுமார் பாண்டே, விதை ஆய்வு துணை இயக்குநர் பி.ஜே.குணசேகர், விதைச் சான்று உதவி இயக்குநர் எஸ்.ஆர்.பாலாஜி, வேளாண்மை துணை இயக்குநர் வாசுதேவரெட்டி, வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேஸ்வரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வேலூர் மாவட்டத்தில் பரவலாக மழை

வேலூர் மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாக மாலை நேரத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

வடமேற்கு பருவமழை வருகிற 20-ஆம் தேதிக்கு முன்னதாக தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், வளிமண்டல மேல் அடுக்கில் உருவான காற்றுச் சுழற்சி காரணமாக வேலூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை பிற்பகலில் வேலூர், சுற்றுப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

தொடர்ந்து, சுமார் 30 நிமிடம் பலத்த மழை பெய்தது. இதேபோல், மாலையில் நகரில் பரவலாக நல்ல மழை பெய்தது. இதைத் தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசியது.

மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்):

ஆம்பூர் 14.2, குடியாத்தம் 23.2, திருப்பத்தூர் 33.3, வாணியம்பாடி 41.2, வேலூர் 6.3, ஆலங்காயம் 76.2, மேல்ஆலத்தூர் 14.4.

## அக்.12-இல் காய்கறி சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

செடி முருங்கை, செடி அவரை, வெண்டை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 12-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து பயிற்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:முகாமில் செடி அவரை, செடி முருங்கை, வெண்டையில் உள்ள ரகங்கள், பருவம், விதை அளவு, விதை நேர்த்தி, பயிர் இடைவெளி, சொட்டு நீர் பாசன முறையில் நீர்வழி உரமிடல், களை நிர்வாகம், பூச்சி, நோய் நிர்வாக முறைகள் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்பங்களும் விரிவாகக் கற்றுத்தரப்படும்.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ, அல்லது 04286 - 266345, 266244 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு வரும் 11-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சீமைக்கருவேல மரங்களை வளர்க்கத் தடை**

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதியில் அரசால் தடை செய்யப்பட்டுள்ள சீமைக்கருவேல மரங்களை வளர்க்கத் தடை செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள், தனியார், நிறுவனங்கள் உள்பட அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென நகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து நகராட்சி ஆணையர் (பொ) ஜெ. சுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின்பேரில் நீரவளத்துக்கும், நிலவளத்துக்கும், சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் மனிதர்கள், கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய சீமைக்கருவேல மரங்கள் எனப்படும் நச்சு மரங்களை புதுக்கோட்டை

நகராட்சிப் பகுதிக்குள் வளர்ப்பதற்கும் பராமரிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீர் நிலைகள், பொது இடங்களில் வளர்ந்துள்ள சீமைக்கருவேல மரங்களை நகராட்சி நிர்வாகம் வேருடன் அகற்றி வருகிறது. பொதுமக்களும் தங்களுக்குச் சொந்தமான இடங்களில் வளர்ந்துள்ள சீமைக்கருவேல மரங்களை ஒரு மாத காலக்கெடுவுக்குள் வேரோடு அகற்ற தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம்- 1920 -ல் பிரிவு 233 -ன்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இதில் தவறும்பட்சத்தில் நகராட்சி சட்டவிதிகளின் படியும், தமிழ்நாடு சுகாதார சட்டம்- 1939 -ன் கீழும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் பொதுமக்களுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் வேரோடு அகற்றப்பட்டு அதற்கு உண்டான செலவை சம்பந்தப்பட்டவர்களிடமே வசூல் செய்ய நேரிடும். அவ்வாறு அகற்றப்படும் மரங்கள் பகிரங்க ஏலம் விடப்பட்டு செலவுத்தொகையை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## "ஒரு ஹெக்டேரில் 25 குவிண்டால் பருத்தி மகசூல் பெற இலக்கு'

ஒரு ஹெக்டேரில் 25 குவிண்டால் பருத்தி மகசூல் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்டத்தில் அதிகளவில் பயிரிடப்படும் மக்காசோளம் மற்றும் பருத்தியில் உற்பத்தித் திறனை பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், தலா 1,000 ஹெக்டேரில் செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குன்னம் பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணை திட்ட பயனாளிகளுடன் அண்மையில் கலந்துரையாடிய ஆட்சியர் அப்போது பேசியது:

மக்காசோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒரு ஹெக்டேரில் 10 டன் மகசூல் பெறவும், பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒரு ஹெக்டரில்

25 குவிண்டால் மகசூல் பெறவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேர்தெடுக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மையம், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள், பேராசிரியர்கள் மூலம் குறு வட்டாரம் வாரியாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில், மண் மாதிரிகள் எடுப்பதன் முக்கியத்துவம், மண் ஆய்வுப்படி உரமிடுதல், நுண்ணூட்டச் சத்து மற்றும் உயிர் உரங்களின் முக்கியத்தும், ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்தல், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, மக்காசோள சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்காசோள விவசாயிகளுக்கு, தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், தானிய பயிர்கள் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 4,000, பருத்தி விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், பருத்தி ஊடுபயிர், பயறு திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7,500 மானியமாக வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் மூலம் பயிருக்கு தேவையான திரவ உயிர் உரம், நுண்ணூட்டக் கலவை போன்ற இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்பட்டது. மீதமுள்ள மானியத் தொகைக்கு விவசாயிகள் செலவு செய்ததற்கான ரசீது செலுத்தும்பட்சத்தில் பின்னேற்பு மானியமாக வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்றார் அவர்.

வேளாண்மை இணை இயக்குநர் (பொ) சு. அய்யாசாமி, வேளாண்மை துணை இயக்குநர் (பொ) எஸ். ஆறுமுகம், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பழனிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர்.

## வேளாண் வளர்ச்சித் திட்ட செயல்பாடுகள்: ஆய்வு

திண்டிவனத்தை அடுத்த தென்பசியார் கிராமத்தில் வேளாண் வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தமிழக அரசின் செயல் இயக்குநர் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

வேளாண்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை போன்ற துறைகளின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து தென்பசியார் கிராமத்தில் 30 ஏக்கர் பரப்பில் வேளாண் துறை மூலம் அமைக்கப்பட்டுள்ள இயந்திர விதைப்பு மணிலா தொழில்நுட்பத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து விவசாயிகளிடம் தமிழக அரசின் செயல் இயக்குநர் ஆனந்தகுமார் கருத்து கேட்டார்.

இதனைத் தொடர்ந்து செண்டூர் அருகே அமைக்கப்பட்டுள்ள சூரியஒளி பம்ப் செட்டின் செயல்பாடுகளை பார்வையிட்டு பேசுகையில் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்கள்,நவீன பண்ணைக் கருவிகளை அதிக அளவு பயன்படுத்தினால் வருவாய் அதிகரிக்கும் எனத் தெரிவித்தார்.ஆய்வின் போது விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி,வேளாண் துணை இயக்குநர்கள் ரவி,ராஜேந்திரன் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடிஜெபக்குமார் உடனிருந்தனர்.

## வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பயிர் நடவு பயிற்சி

காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மாணவிகளுக்கான கிராமப்புற பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை கீழ் அக்ரஹாரம் கிராமத்தில் நடைபெற்றது.

கூடுதல் வேளாண் இயக்குநர் ரவிபிரகாசம் உத்தரவின் பேரில், வில்லியனூர் துணை வேளாண் இயக்குநர் முருகேசன் தலைமையில் திருக்காஞ்சி உழவர் உதவியகத்தில் 8 மாணவிகள் தங்கி கிராமப்புற வேளாண் அனுபவங்களை விவசாயிகளிடம் கேட்டு கற்று வருகின்றனர்.வேளாண் துறையின் பல்வேறு பிரிவுகளுக்குச் சென்று

துறை செயல்படுத்தும் திட்டங்களை கேட்டறிந்தனர். வேளாண் துறை நடத்தும் பயிற்சிகளிலும் பங்கேற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக வேளாண் கல்லூரி மாணவிகள் கீழ் அக்ரஹாரம் பகுதியில் உள்ள பழனி என்பவரின் வயலில் நடவுப் பணியில் ஈடுபட்டனர்.

**வாசுதேவநல்லூரில் இன்று புதிய வேளாண்மை கல்லூரி தொடக்கம்**

வாசுதேவநல்லூரில் கே. சுப்பிரமணியநாடார்- வடிவு அம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் எஸ். தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியின் தொடக்க விழா புதன்கிழமை நடைபெறுகிறது.எஸ். தங்கப்பழம் கல்வி நிறுவனங்களின் தலைவர் தொழிலதிபர் எஸ். தங்கப்பழம் தலைமை வகிக்கிறார்.

திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிபதி கே. கருணாநிதி முன்னிலை வகிக்கிறார். திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரி முதன்மை செயல் அலுவலர் க. ரத்தினம் குத்துவிளக்கேற்றுகிறார்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன், கல்லூரியைத் தொடங்கிவைத்து சிறப்புரையாற்றுகிறார்.

கல்லூரி நிர்வாகக் கட்டடத்தை, நீதியரசர் கே. வெங்கட்ராமன், கல்லூரி முதல்வர் அலுவலகத்தை வேளாண்மைத் துறை இயக்குநர் எம். ராஜேந்திரன், வகுப்பறைகளை மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் கே. ராமசாமி, ஆய்வகங்களை வருமான வரித்துறை ஆணையர் எம். கிருஷ்ணசாமி, விடுதிக் கட்டடங்களை வேளாண்மைத் துறை இணைச் செயலர் சி. ராஜேந்திரன், தோட்டக் கலைத் துறை இயக்குநர் எல். சித்ரசேனன் ஆகியோர் திறந்துவைக்கின்றனர்.எஸ். தங்கப்பழம் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி. முருகேசன் வரவேற்கிறார். திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழக

பணிநிறைவு முதுநிலைப் பதிவாளர் ஜி. பாலகிருஷ்ணன் நன்றி கூறுகிறார்.

## ராமநாதபுரம் மீனவ பெண்ணுக்கு அமெரிக்க விருது; நாளை வழங்கப்படுகிறது



சென்னை,

தேசிய மீனவர் பேரவை தலைவர் எம்.இளங்கோ நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-ராமநாதபுரம் அருகே உள்ள சின்னபாலம் கிராமத்தை சேர்ந்த 45 வயது பெண் லட்சுமி. இவர் அப்பகுதியில் உள்ள மன்னார் வளைகுடா தேசிய கடல் பூங்கா அருகில் கடல்பாசி அறுவடை செய்யும் தொழில் செய்பவர்.

கடல்பாசி தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் உள்ளிட்ட மீனவ பெண் தொழிலாளர்களின் அமைப்பான ராமநாதபுரம் மீன்பிடி தொழிலாளர் யூனியன் நிர்வாகியாக உள்ள லட்சுமி, மீனவ பெண்

தொழிலாளர்களுக்காக போராடி வருபவர். இவருக்கு அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாநிலத்தில் நாளை(வியாழக்கிழமை) நடக்கும் விழாவில் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான 2015-ம் ஆண்டின் ‘சிறந்த மகளிர் தலைவி’ விருது வழங்கப்பட இருக்கிறது. சாதாரண மீனவ சமுதாய கிராம பெண்ணான லட்சுமி, கடல் மற்றும் கடற்கரை சூழலை பாதுகாக்க தொடர் நடவடிக்கை எடுத்ததற்காக இந்த சர்வதேச விருது வழங்கப்படுகிறது. விருது பெற செல்லும் லட்சுமிக்கு சென்னை விமான நிலையத்தில் நேற்று வழியனுப்பு விழா நடந்தது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தொடர் மழையால் விளைச்சல் பாதிப்பு: தக்காளி விலை அதிகரிப்பு



கிணத்துக்கடவு,

தொடர் மழை காரணமாக கிணத்துக்கடவு பகுதியில் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தக்காளி விலை அதிகரித்துள்ளது.

<u>தக்காளி சாகுபடி</u>

கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான சொக்கனூர், நெம்பர் 10 முத்தூர். கோவிந்தாபுரம், கோதவாடி உள்பட 30–க்கும் மேற்பட்ட கிராமங்களில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தக்காளி செடிகளுக்கு வெயிலுடன், தண்ணீர் கிடைத்தால் நல்ல விளைச்சல் கிடைக்கும். அதே நேரத்தில் மழை பெய்தால் செடிகளில்

உள்ள தக்காளிகள் கீழே விழுந்து விடும். அல்லது செடிகளில் அழுகி விடும்.

இந்த நிலையில் மானாவாரி, தரிசு நிலங்களில் தக்காளி நாற்றுகள் நடவு செய்யப்பட்டன. அப்போது மழை பெய்யாததால் கடந்த சில வாரங்களாக கிணத்துக்கடவு காய்கறி சந்தைகளுக்கு தக்காளி வரத்து அதிகமாக இருந்தது. இதையொட்டி கடந்த 2 வாரங்களுக்கு முன்பு 14 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி ரூ.150–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>விலை அதிகரிப்பு</u>

இதனிடையே கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக விவசாய நிலங்களில் தண்ணீர் அதிகமாக தேங்கி நிற்கிறது. மேலும் வெயிலின் தாக்கம் குறைவாக இருப்பதால், நிலங்களில் ஈரப்பதம் காய வில்லை. இதனால் தக்காளிகள் அழுக தொடங்கின.

இதன் காரணமாக தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதையொட்டி கிணத்துக்கடவு காய்கறி சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்தது. நேற்று நடந்த ஏலத்துக்கு ஒரு பெட்டி தக்காளி ரூ.260–க்கு ஏலம் சென்றது. கடந்த வாரங்களை காட்டிலும் 14 கிலோ பெட்டிக்கு ரூ.110 அதிகரித்துள்ளது.

<u>அதிகரிக்கும் வாய்ப்பு</u>

இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

கிணத்துக்கடவு சுற்றுப்புற பகுதிகளில் இருந்து சந்தைக்கு வரும் தக்காளி வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரித்துள்ளது. தொடர்ந்து பருவமழை பெய்யும் சூழ்நிலை உள்ளதால் தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. இதன் காரணமாக மேலும் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

இது தொடர்பாக விவசாயிகள் கூறியதாவது:–

தக்காளி நல்ல விளைச்சல் தரக்கூடிய நேரத்தில் மழை பெய்ததால் அவைகள் அழுகும் அபாயம் உள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு அதிகமாக விளைச்சல் இருந்த போது, விலை கிடைக்க வில்லை. இதனால் விவசாயிகள் சிலர் தக்காளிகளை செடியில் இருந்து பறிக்க வில்லை. சிலர் கால்நடைகளுக்கு உணவாக கொடுத்தனர். ஆனால் தற்போது மழையால் விளைச்சல் குறைந்ததால் விலை அதிகரித்துள்ளது. இது ஆறுதல் அளிக்கும் வகையில் உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## தோட்டக்கலைத்துறை சார்பில் பசுமைக்குடில் அமைப்பதற்கு ரூ.5 கோடி மானியம் கலெக்டர் தகவல்



திண்டுக்கல்,

தோட்டக்கலைத்துறை சார்பில் பசுமைக்குடில் அமைப்பதற்கு 72 பேருக்கு ரூ.5 கோடியே 7 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் ஹரிகரன் தெரிவித்தார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் செயல்படுத்தப்படுகிற திட்டங்கள் குறித்து கலெக்டர் ஹரிகரன் நேற்று ஆய்வு மேற்கொண்டார். அதன்படி திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தாலுகா பாடியூர் பகுதியில், தோட்டக்கலைத்துறை சார்பில் மானாவரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட வெள்ளரி பண்ணையையும், ரூ.18 லட்சம் மானியத்தில் உருவாக்கப்பட்ட பசுமைக்குடிலையும் கலெக்டர் பார்வையிட்டார்.

இதேபோல் தொட்டணம்பட்டி பகுதியில் ரூ.19 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட பண்ணையம், ரூ.8 லட்சம் மானியத்தில் உருவான பசுமைக்குடில் ஆகியவற்றையும் கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

திண்டுக்கல் மாவட்டத்தில் பழப்பயிர்கள், காய்கறி பயிர்கள், மலைத்தோட்ட பயிர்கள், சுவை தாழித பயிர்கள் (மிளகு, மிளகாய்), மருத்துவ பயிர்கள் மற்றும் பூக்கள் ஆகியவை 69 ஆயிரத்து 736 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தோட்டக்கலை பயிர்களின் பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தியை பெருக்கவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

<u>ரூ.5 கோடி மானியம்</u>

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் நடப்பு ஆண்டில் ரூ.4 கோடியே 18 லட்சம் மதிப்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 1,120 ஹெக்டேர் பரப்பளவில் மா, கொய்யா, திராட்சை, எலுமிச்சை, கோகோ, பூக்கள், வெங்காயம், மிளகாய் ஆகியவை புதிதாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் பசுமைக்குடில் அமைப்பதற்கு 72 பயனாளிகளுக்கு அரசு மானியமாக ரூ.5 கோடியே 7 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பசுமைக்குடில் பண்ணைக்கு சொட்டுநீர் பாசனம் மூலம் குறைவான தண்ணீரை

பயன்படுத்தி நிறைந்த மகசூல் பெறும் நோக்கத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகளை பல்வேறு குழுக்களாக பிரித்து, காய்கறி உற்பத்தியை அதிகரித்து விற்பனையை மேம்படுத்தும் நோக்கத்தில் புறநகர் எல்லை காய்கறி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் ரூ.2 கோடியே 46 லட்சம் மதிப்பில் பல்வேறு பணிகள் நடந்து வருகிறது. தேசிய மருத்துவ இயக்க திட்டத்தின் மூலம் கண்வலிக்கிழங்கு 50 ஹெக்டேரில் ரூ.41 லட்சம் மதிப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

<u>மானியவிலையில் பழக்கன்றுகள்</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் 2 அரசு தோட்டக்கலைத்துறை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு தரமான பழவகை கன்றுகள், அழகு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் செயல்படுத்தப்படுகிற திட்டங்கள், மானியங்களை விவசாயிகள் பயன்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் ஹரிகரன் கூறினார். இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வீரபத்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராமநாதன், உதவி இயக்குநர் கணேசன், உதவி வேளாண்மை அலுவலர் சண்முகம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சாலிதளபதி ஆகியோர் உடனிருந்தனர்.

## கோபி பகுதியில் சூறாவளி காற்றில் ஆயிரக்கணக்கான வாழைகள் சாய்ந்தன



கோபி,

கோபி பகுதியில் சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழையால் ஆயிரக்கணக்கான வாழைகள் சாய்ந்தன. சூறாவளிக்காற்றுடன் மழைகோபி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்தது. கோபியில் உள்ள கீரிப்பள்ளம் ஓடையில் உள்ள புதுப்பாலத்தை மூழ்கடித்தப்படி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அதுமட்டுமின்றி கீரிப்பள்ளம் ஓடையில் கரைபுரண்டு ஓடிய வெள்ளம் கோபி நகருக்கு உள்பட்ட சாமிநாதபுரம், வண்டிப்பேட்டை, முத்து நகர், ரோஜா நகர், மல்லிகை நகர் உள்பட பல பகுதிகளில் உள்ள 100-க்கும் மேற்பட்ட வீடுகளில் புகுந்தது. இதில் வீடுகளில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் வெள்ளத்தில் மிதந்து சென்றன. பலர் தங்களுடைய வீடுகளில் புகுந்த நீரை வாளியால் இறைத்து வெளியேற்றினர். இதனால் அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டனர். வாழைகள் சாய்ந்தன

இதேபோல் கோபி அருகே உள்ள கலிங்கியம், அவ்வையார்பாளையம், கெட்டிச்செவியூர், நிச்சாம்பாளையம் உள்பட பல பகுதிகளில் சூறாவளிக்காற்று வீசியது. இதில் அந்த பகுதியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான வாழைகள் சாய்ந்தன. இதன் சேதமதிப்பு பல லட்சம் இருக்கும் என அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.இதுபற்றி தகவல் அறிந்ததும் கோபி சப்-கலெக்டர் கிருஷ்ணன் உண்ணி, தாசில்தார் ஆறுமுகம் மற்றும் அதிகாரிகள் வெள்ளம் சூழ்ந்த வீடுகளையும், சூறாவளிக்காற்றால் சாய்ந்த வாழைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

## நாட்டு கோழிப்பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு பயிற்சி கலெக்டர் பழனிசாமி தகவல்



நாகை மாவட்டத்தில் நாட்டு கோழிப்பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்று கலெக்டர் பழனிசாமி கூறியுள்ளார்.

கோழியின மேம்பாட்டு திட்டம்

நாகை மாவட்ட கலெக்டர் பழனிசாமி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:- தமிழக முதல்-அமைச்சரால் 2012-2013-ம் ஆண்டு கோழியின மேம்பாட்டு திட்டம் அறிவிக்கப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012-13-ம் ஆண்டில் நாகை மாவட்டத்தில் 35 பயனாளிகளுக்கும், 2013-2014-ம் நிதியாண்டில், 240 பயனாளிகளுக்கும், 2014-2015-ம் நிதியாண்டில் 160 பயனாளிகளுக்கும் நாட்டு கோழி வளர்ப்பினை மேம்படுத்தும் வகையில் நாட்டு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது 2015-16-ம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டு ஒரு பயனாளிக்கு ரூ.1 லட்சத்து 29 ஆயிரத்து 500 வீதம் மொத்தம் 160 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் கோழி கொட்டகை அமைத்திட, கோழிக்குஞ்சு மற்றும் தீவனம் உபகரணங்கள் வாங்கிட முதல் தவணையாக 25 சதவீத மானிய தொகை ரூ.32 ஆயிரத்து 375 மாநில அரசால் வழங்கப்படும். இத்திட்டத்தின் இறுதியில் 25 சதவீத மானிய தொகை (ஆதிதிராவிடர்களுக்கு 33 சதவீதம்) நபார்டு வங்கி மூலமாக வழங்கப்படும். 2-வது தவணை கோழிக்குஞ்சுகள் வளர்க்க ஊக்க தொகையாக ரூ.3 ஆயிரத்து 125-ம், 3-வது தவணை கோழிகுஞ்சு வளர்க்க ஊக்க தொகையாக ரூ. ஆயிரத்து 875-ம் தமிழ்நாடு அரசினால் கால்நடை பராமரிப்புதுறையின் மூலம் வழங்கப்படும்.

பயிற்சி முகாம்

தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கும் மற்றும் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கும் நாளை (வியாழக்கிழமை) மதியம் 2 மணிக்கு நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும், 9-ந்தேதி மதியம் 2 மணி அளவில் மயிலாடுதுறை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கிலும் மாவட்ட கலெக்டர் பழனிசாமி தலைமையில் நாட்டு கோழி வளர்ப்பு திட்ட பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு பயனாளிக்கு ஒரு முறை

மட்டுமே மானியம் வழங்கப்படும். இத்திட்டம் கிராமப்புற பகுதியில் மட்டுமே செயல்படுத்தப்பட உள்ளது. 12 மற்றும் 14 வார காலத்திற்குள் நாட்டுக் கோழிகள் விற்பனை செய்யும் அளவிற்கு வளர்ந்துவிடும் என்பதால் ஒரு ஆண்டில் 14 வார சுழற்சியில் 3 தவணையில் 250 கோழிகள் வளர்க்க ஏதுவாக இத்திட்டம் அமைந்துள்ளது. எனவே, நாகை மாவட்டத்தில் நாட்டு கோழிப்பண்ணை அமைத்திட ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

## 3,500 டன் கடுகு புண்ணாக்கு கோழிப்பண்ணைகளுக்கு சென்றன லாரிகள் வேலைநிறுத்தம் வாபஸ் எதிரொலி



நாமக்கல் ரெயில் நிலையத்தில் இருந்து கடுகு புண் ணாக்கு மூட்டைகள், லாரிகளில் ஏற்றி கோழிப்பண்ணை களுக்கு கொண்டு செல்லப்பட்டபோது எடுத்தபடம்.

லாரிகள் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டதை தொடர்ந்து நாமக்கல் ரெயில் நிலையத்தில் சரக்கு ரெயில் இருந்த 3 ஆயிரத்து 500 டன் கடுகு புண்ணாக்கு கோழிப்பண்ணைகளுக்கு எடுத்து செல்லப்பட்டன.

கடுகு புண்ணாக்கு தேக்கம்

நாமக்கல் மண்டலத்தில் 1100-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு சுமார் 5 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த கோழிகளின் தீவனத்திற்கு தேவையான மக்காச்சோளம், கடுகு புண்ணாக்கு போன்றவை வடமாநிலங்களில் இருந்து சரக்கு ரெயில் மூலம் நாமக்கல் கொண்டு வரப்படுகின்றன.

அந்த வகையில் கடந்த 2-ந் தேதி மாலை 6 மணிக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து 42 வேகன்களில் சுமார் 3 ஆயிரத்து 500 டன் கடுகு புண்ணாக்கு சரக்கு ரெயில் மூலம் நாமக்கல் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு வரும் புண்ணாக்கு மறுநாள் அதாவது 3-ந் தேதி காலையில் கோழிப்பண்ணைகளுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படும். ஆனால் லாரிகள் வேலைநிறுத்தம் நீடித்து வந்ததால், அவை சரக்கு ரெயிலில் தேக்கம் அடைந்து கிடந்தன. பண்ணைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மத்திய மந்திரி நிதியுடன் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து, லாரிகள் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இரவு முதலே லாரிகள் இயங்க தொடங்கின. இதையடுத்து நேற்று காலை சரக்கு ரெயிலில் இருந்த கடுகு புண்ணாக்கு மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு, கோழிப்பண்ணைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. இதனால் தீவன தட்டுப்பாடு ஏற்படுமோ? என்ற அச்சத்தில் இருந்த கோழிப்பண்ணையாளர்கள் நிம்மதிஅடைந்தனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரபலமாகி வரும் எந்திரம் மூலம் நெல் நடவு முறை



புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டு எந்திரம்மூலம் நெல் நடவு முறை பிரபலமாகி வருவதாகவும், எந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுவதாகவும் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டு உள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

எந்திர நெல் நடவு முறை

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சம்பா நெலசாகுபடி பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக பருவத்தில் சாகுபடி பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்பிரச்சினையை சமாளிக்கும் விதமாக தற்போது நடப்பாண்டு மாவட்டத்தில் எந்திர நெல் நடவுமுறை வேளாண்மை துறை மூலம் பரவலாக்கப்பட்டு வருகிறது. பாய் நாற்றங்கால் அல்லது நாற்று தட்டுகளில் வளர்ந்த 14-15 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுகளை சேற்றுழவு செய்த மண்ணில் எந்திரம் மூலம் நடவு செய்வதே எந்திர நடவுமுறையாகும்.

•இளம் வயது நாற்றுகளை நடவு செய்வதால் அதிக அளவு தூர்கள்

கிடைத்து பயிர் செழித்து வளர்கிறது.
•15 நாட்கள் இளவயது நாற்றுகளை நடவு செய்வதால் நாற்றங்கால் பராமரிப்பு செலவுகள் குறைகிறது.
•எந்திர நடவில் சீரான இடைவெளியும் பயிர் எண்ணிக்கையும் உறுதிப்படுத்தப்படுகிறது.
•எந்திர நடவில் கை நடவினை விட குறைந்த ஆட்கள் மூலம் குறைந்த நேரத்தில் அதிகளவு பரப்பில் நடவு செய்யலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய 2 ஆட்கள் போதுமானது.
•நடவு எந்திரத்தை வாடகைக்கு விடுதல் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது.
•எந்திர நெல் நடவு முறையில் உற்பத்தியும், உற்பத்தி திறனும் அதிகரித்து விவசாயிகளின் நிகர வருமானம் அதிகரிக்க வழி வகுக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டு 45 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் எந்திர நெல் நடவு முறையில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு அனைத்து வட்டாரங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரூ.3 ஆயிரம் மானியம்

எந்திர நெல் நடவு முறையினை விவசாயிகளிடம் பிரபலப்படுத்தும் நோக்கத்தில் எந்திர நெல் நடவுமுறை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் எக்டருக்கு ரூ.3 ஆயிரம் பின்னேற்பு மானியம் வழங்கப்படுகிறது.
புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரபலமாகி வரும் எந்திரம் மூலம் நெல் நடவு முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு எந்திர நடவு மேற்கொண்டதற்கான பட்டியலையும் உரிய சான்றுகளுடன் விண்ணப்பத்தினையும் வழங்கினால் வேளாண்மை துறை அலுவலர்கள்

உரிய ஆய்வு மேற்கொண்டு எந்திர நெல் நடவு முறையினை உறுதி செய்து அதற்கான பின்னேற்பு மானியத்தை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக பற்று வைக்கப்படும்.

110 எக்டேர் பரப்பளவில்...

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை சுமார் 110 எக்டேர் பரப்பளவில் எந்திர நெல் நடவு முறையில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் பகுதியின் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு இத்திட்டத்தில் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை : ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 23,000 கனஅடியாக உயர்வு**



பென்னாகரம்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால், ஒகேனகல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 23 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இதனால் மெயின் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனிடையே அம்மாநில கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று காலை 11 மணிக்கு தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிற்கு வினாடிக்கு 8,400 கனஅடியாக இருந்த நீர்வரத்து மதியம் 1 மணிக்கு, வினாடிக்கு 23 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. ஒகேனக்கல்லில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், மெயின் அருவியில் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. ஒகேனக்கல் போலீசார், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர் 50க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேட்டூர் அணைக்கு நேற்று வினாடிக்கு 7,299 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. காவிரி டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 10,600 கனஅடி

வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நேற்று முன்தினம் 69.15 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 68.72 அடியாக சரிந்தது.

**சீனாவில் அமைக்கப்பட்டுள்ள மின்மினிப் பூச்சி பூங்கா: மக்கள் அமோக வரவேற்பு**



பீஜிங் : சீனாவில் அமைக்கப்பட்டுள்ள மின்மினிப் பூச்சி பூங்கா மக்களின் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. மத்திய சீனாவின் ஹூபேய் மாகாணத்தில் உள்ள வுஹான் நகரில் திறக்கப்பட்டுள்ள இந்த பூங்காவில் இரவு நேரங்களில் பல்லாயிரக்கணக்கான மின்மினி பூச்சிகள் ஒளியை உமிழும் ரம்மியமான காட்சியை பலர் கண்டு ரசித்து வருகின்றனர். பார்வையாளர்கள் இங்கிருந்து மின்மினிகளை விலைக்கு வாங்கி, கொண்டுசெல்லவும் முடியும். இங்கு உற்பத்தியாகும் மின்மினிப் பூச்சிகள் ஒரு ஜாடியில் அடைத்து, பல்வேறு இடங்களுக்கும் ஆன்லைன் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது.கடந்த மே மாதம் இந்த பூங்கா திறக்கப்பட்டதில் இருந்து அன்றாடம் சராசரியாக ஐயாயிரம் பார்வையாளர்கள் இங்கு வருகை தந்தவண்ணம் உள்ளனர். பல்லாயிரம் மின்மினிகளின் ஒளிமிக்க கண்சிமிட்டலில் உள்ளங்களை பறிகொடுத்தவர்களாக பரவசத்துடன் அவர்கள் மகிழ்கின்றனர்.

ஆண்டுதோறும் மே மாதத்தில் இருந்து அக்டோபர் மாதம் வரை இந்த மின்மினிப் பூங்கா செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**அரசு நிறுவனங்கள் மூலம் முதல் கட்டமாக 250 டன் வெங்காயம் மும்பை வந்தது: இந்த மாத இறுதிக்குள் 1,750 டன் வரும்**




புதுடெல்லி: அரசு நிறுவனங்கள் மூலம் வெளிநாடுகளில் இருந்து 250 டன் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு சந்தையில் வெங்காயம் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய அரசு உத்தரவிட்டது. இதையடுத்து, சந்தைக்கு வரத்தை அதிகரித்து விலையை கட்டுப்படுத்த இரண்டு டெண்டர்கள் மூலம் தலா 1,000 டன் வெங்காயம் சீனா மற்றும் எகிப்தில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதித்தது. இந்திய உலோக மற்றும் கனிம விற்பனை கழகம் டெண்டர் வெளியிட்டது. இதில் முதல் கட்டமாக 250 டன் வெங்காயம் வெளிநாடுகளில் இருந்து கன்டெய்னர்களில் மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக உணவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பதுக்கலுக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக சந்தையில் வெங்காயம் விலை ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளது. இந்த மாத

இறுதிக்குள் அரசு நிறுவனங்கள் மூலம் 1,750 டன் வெங்காயம் வந்து சேரும் என்று இந்த அமைச்சகம் அறிக்கையில் கூறியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ வெங்காயம் ₹45க்கு விற்கப்படுகிறது. அத்தியாவசிய பொருட்கள் விலை மற்றும் இருப்பு நிலவரம் குறித்து அமைச்சரவை குழு அவ்வப்போது சந்தையில் வெங்காயம் மற்றும் பருப்பு வகைகளை கண்காணித்து வருகிறது.

இதுபோல், பருப்பு வகைகளும் 5,000 டன் இறக்குமதிக்கு ஆர்டர் செய்யப்பட்டுள்ளது. இதில், மும்பை மற்றும் சென்னை துறைமுகங்களுக்கு 3,223 டன் பருப்பு கன்டெய்னர்களில் வந்துள்ளது. வரும் 20ம் தேதி எஞ்சிய 1,777 டன் பருப்பு வகைகள் வந்து சேரும் எனவும், விரைவில் வெங்காயம், பருப்பு விலை குறைய வாய்ப்புள்ளது எனவும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 2.9 மில்லியன் டன்னை எட்டும் பாசுமதி அரிசி விற்பனை இரட்டிப்பாக அதிகரிப்பு



புதுடெல்லி: பாசுமதி அரிசி விற்பனை கடந்த 2009-10ம் ஆண்டில் 9,00,000 டன்களாக இருந்தது. இது 2013-14 ஆண்டில் இந்த விற்பனை

1.6 மில்லியன் டன்களாக அதிகரித்தது. இதே நிலை தொடர்ந்தால் 2016-17 நிதியாண்டில் 2.9 மில்லியன் டன்களை எட்டும் என்று ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

கடந்த 2014-15 நிதியாண்டில் 3.5 மில்லியன் டன் பாசுமதி ஏற்றுமதி ஆனது. இதன் தோராய மதிப்பு 452 கோடி டாலர். இந்த நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான 5 மாதங்களில் கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி 25 சதவீதம் சரிந்தது. முன்பு டன்னுக்கு 1,220 டாலராக இருந்த விலையும் 920 டாலராக சரிவடைந்து விட்டது.

இதனால், ஏற்றுமதியாளர்கள் கவனம் தற்போது உள்நாட்டு சந்தையில் திரும்பியுள்ளது. பிரபல பிராண்டு பாசுமதி அரிசி சப்ளை செய்வதன் மூலம் ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவை ஈடுகட்ட முடியும். சராசரி லாபத்தை விட பிரபல பிராண்டு பாசுமதி விற்பனையில் 10% கூடுதல் லாபம் கிடைக்கும் என்று ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

**வெப்ப சலனத்தால் இடி, மின்னலுடன் மழை**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் வெப்ப சலனத்தால் இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்து வருவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே வேளையில், இதை வரவேற்றுள்ள விவசாயிகள், இதேபோல் பலத்த மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்களின் பொருளாதாரம் பாசன நிலங்களையே நம்பியுள்ளது. இம் மாவட்டத்தின் மொத்த விவசாயப் பரப்பு சுமார் 1.40 லட்சம் ஹெக்டேர் ஆகும். இதில் 11,200 ஹெக்டேர் காவிரி பாசனப் பகுதி உள்பட 96 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடைபெறுகிறது. இதில் 90% விவசாய நிலங்கள் நீர் ஆதாரத்துக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் மழை மற்றும் நிலத்தடி நீரை மட்டுமே நம்பியுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட

கண்மாய்களில் இருந்து கிடைக்கும் நீர் ஆதாரமே விவசாயத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது. இந்நிலையில் கடந்த பல ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் போதிய அளவில் மழை பெய்யவில்லை. இதனால் பல குளங்கள் தண்ணீரின்றி வறண்டுள்ளன. விவசாய நிலங்களும் புல் பூண்டு முளைத்தும், வறண்டும் காணப்படுகின்றன. மழையை மட்டுமே நம்பி விவசாயம் செய்துவரும் விவசாயிகள் தற்போது அதை மறக்கும் நிலைக்கு கொஞ்சம் கொஞ்சமாக தள்ளப்பட்டு வரும் சூழல் உருவாகி வருகிறது. போதிய அளவில் மழையில்லாததே முக்கியக் காரணியாகத் திகழ்கிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக வெப்ப சலனத்தால் புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. கடும் வெயிலால் ஏற்பட்ட உக்கிரத்தால் பரிதவித்து வந்த மக்கள் தற்போது பெய்து வரும் மழையால் மனதுக்கு இதமளிக்கும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். இதே போல், கிணற்றுப் பாசன விவசாயிகளும், தற்போது பெய்து வரும் மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இருப்பினும், இதுபோன்ற மழை தினமும் தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

**இயற்கைமுறை விவசாயம் விழிப்புணர்வு பிரசாரம்**

ஆர்.எஸ்.மங்கலம், :ராமநாதபுரத்தில் பிரஜாபிதா பிரம்ம குமாரிகள் அமைப்பு சார்பில் இயற்கை விவசாயம் குறித்து விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகள் தற்போது அதிக விஷத்தன்மை கொண்ட பூச்சிக்கொல்லி மற்றும் உரங்களை பயன்படுத்துகின்றனர். இதனால் விளைச்சலில் கிடைக்கும் பொருட்கள் பெரும்பாலும் மருந்துத்தன்மை கொண்டதாக உள்ளன. இதை தவிர்க்க இயற்கை உரங்களை பயன்படுத்துவது குறித்தும், நேர்மறையான எண்ணங்களை உருவாக்குவது குறித்தும் பிரம்ம குமாரிகள் இயக்கத்தினர் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2ம்

தேதி பிரசாரம் தொடங்கியது. கிராமங்கள்தோறும் வாகனம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வு பிரசாரம் 10ம் தேதி வரை நடக்கிறது. இது குறித்து அமைப்பினர் கூறுகையில், ''கடந்த காலங்களில் விவசாயிகள் செயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் பார்க்கவில்லை. இயற்கை உரங்களையே பயன்படுத்தினர். அது சத்தான உணவாக இருந்தது. இன்று முற்றிலும் மாறிவிட்டது. இது குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளோம். மேலும், தியானம் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் எடுத்துரைக்கின்றோம்'' என்றனர்.

**செய்நேர்த்தி மூலம் பருத்தி மிளகாய்க்கு கூடுதல் விலை வேளாண்மைத்துறை ஆலோசனை**

பரமக்குடி, : பருத்தி, மிளகாய்க்கு கூடுதல் விலை கிடைக்க மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.பருத்தி, மிளகாய் போன்றவற்றை அறுவடை செய்து அப்படியே விற்பனைக்கு கொண்டு செல்வதால் விலை குறைவாக கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. சில செய்நேர்த்தி தொழில்நுட்பங்களை மேற்கொள்வதின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும்.பருத்தியைப் பொறுத்தளவில் சுத்தத்தன்மை, நிறம், மென்மை, குறைவான ஈரம் ஆகிய நான்கும் விலையை தீர்மானிக்கும். எனவே நன்கு மலர்ந்த பருத்தியை மட்டும் செடியில்இருந்து பறிக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு ஒருமுறை பருத்தியை பறிக்கலாம்.காலைநேரங்களில் பறிப்பது சிறந்தது. அப்போதுதான் காய்ந்தஇலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது. சேகரித்த பருத்தியை நிழல், மணல் பரப்பிய களங்களில் காயப்போட வேண்டும். நேரடி வெயிலில் உலரவைத்தால் பஞ்சின்நிறம் குறைந்துவிடுவதுடன் மென்மைத்தன்மையும் பாதிக்கும்.பின்பு நன்குஉலர்த்தி, சருகுகள், பூச்சிநோய் தாக்கியது, கொட்டைகள்

உள்ளிட்டவற்றை அகற்ற வேண்டும். தொடர்ந்து காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில் சேமிக்க வேண்டும். பருத்தியை ரகம்வாரியாக தனித்தனியாக சேமிப்பது நல்லது.மிளகாய்: மிளகாயில் பூஞ்சாணக்கொல்லிகள் தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். மிளகாய்செடியில் பழங்கள் முழுவதும் சிவப்புநிறமாக மாறியவுடன் பறிக்கலாம். பழங்களைப் பறித்த அன்றே காயப்போட வேண்டும். மணல்பரப்பிய களங்கள் இதற்கு ஏற்றது. மிதமான வெப்பநிலையில் காலையிலும், மாலையிலும் நான்கு நாட்கள் காயப்போட வேண்டும். இரவில் மிளகா பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது இலேசான படுதாவை போட்டு மூடி வைக்கலாம்.மிளகாய்வற்றல் சிவப்புநிறமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். தவறான சேமிப்புமுறையில் வற்றல் கருப்புநிறமாக மாறினால் நல்லவிலைக்கு விற்கமுடியாது. மிளகாய் வற்றலை சந்தைக்கு கொண்டு செல்லும்போது சாக்கு அமுக்கக்கூடாது. இதனால் வத்தல் உடைந்து எதிர்பார்த்த விலை கிடைக்காமல் போகலாம் என்று வேளாண்மைத்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தாவர உணவின் அவசியத்தை இளைஞர்களிடம் பரப்ப வேண்டும்_: அமைச்சர் பா.வளர்மதி வலியுறுத்தல்



உலக சைவ கவுன்சில் சார்பில் ‘உலக சைவ தின விழா’ எழும்பூர் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி அரங்கில் நேற்று நடைபெற்றது. சமூக நலத்துறை அமைச்சர் பி.வளர்மதி விழாவைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் ஏராளமான பள்ளி சிறார்கள் கலந்து கொண்டு ஆர்வமாக ஓவியம் வரைந்தனர். படம்: மு.முருகேஷ்

தாவர உணவின் அவசியத்தை இளைய சமுதாயத்தினரிடம் பரப்ப வேண்டும் என்று தமிழக சமூக நலத்துறை அமைச்சர் பா.வளர்மதி வலியுறுத்தினார்.

உலக சைவ கவுன்சில் சார்பில் உலக சைவ தின விழா எழும்பூர் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி அரங்கில் நேற்று நடைபெற்றது. விழாவை தொடங்கி வைத்து அமைச்சர் பேசியதாவது:

தமிழக மக்கள் முன்பெல்லாம் கூழ், அரிசி உணவுகளை உண்டு நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த னர். இப்போது நூடுல்ஸ் போன்ற உணவுகளை குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுகின்றனர். இவை உடலுக்கு போதிய சத்தை தருவதில்லை. அத்துடன் உடல் நலனையும் கெடுக்கின்றன.

சைவ உணவான காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். போட்டி நிறைந்த இவ் வுலகில் உங்கள் குழந்தைகளும் வெற்றி பெற வேண்டுமானால் அவர்களை ஊக்குவிப்பதோடு, நல்ல சத்தான உணவுகளை கொடுக்க வேண்டும்.

சத்து நிறைந்த தாவர உணவின் அவசியத்தை இளைய சமுதாயத்தினரிடம் பரப்ப வேண்டி யது அவசியமாகும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

விழாவில், எஸ்.எம்.கே.ஜெயின் குரு சேவா சமிதியின் தலைவர் ஆர்.ஜே.ஆனந்த்முல் சலானி, ஹனு ரெட்டி ரியால்டி இந்தியா நிறுவன இயக்குநர் சுரேஷ் ரெட்டி சிர்லா, உலக சைவ கவுன்சில் தலைவர்

தாராசந்த் துகார், இணைத் தலைவர் அமிரித் அகர்வால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விழாவையொட்டி சென்னை யைச் சேர்ந்த பள்ளிக் குழந்தை களுக்கு ஓவியம், சுவரொட்டி எழுது தல், மாறுவேடம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இவற்றில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### வட தமிழகத்தில் இன்று கன மழைக்கு வாய்ப்பு

வட தமிழகத்தில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவலாக ஆங்காங்கே இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவ மழை முடியும் தறுவாயில் இருந்தாலும் தமிழகம், கேரளம் மற்றும் தென் கர்நாடகத்தில் தீவிரமடைந்துள்ளது. தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் சராசரி வெயிலை விட குறைவாகவும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் சராசரியை வெயிலை விட அதிகமாகவும் பதிவாகியிருந்தது

விகடன்

**ஐம்பதை கடந்த ஆணா நீங்கள் ? புராஸ்டேட் புற்றுநோய் உஷார் !**



புராஸ்டேட் புற்றுநோய் குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்” என்று இந்திய புராஸ்டேட் புற்றுநோய் தடுப்பு நிறுவனத்தின் (Indian Prostate Cancer Foundation) நிறுவனர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் சிவராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.புராஸ்டேட் புற்றுநோய் என்பது சமீப காலமாக ஆண்களின் ஆரோக்கியத்திற்கு எமனாக புறப்பட்டு உள்ளது. 50 ஐ கடந்த ஆண்களுக்கு வரும் இந்நோய் சமீபகாலங்களாக ஆண்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. சென்னை தலைமைச் செயலகத்தில் புராஸ்டேட் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் நடந்தது. அதில் பேசிய டாக்டர் அனந்தகிருஷ்ணனின் பேச்சு புராஸ்டேட் புற்றுநோய் குறித்து அபாயத்தை தெளிவாக சொன்னது. “புராஸ்டேட் புற்றுநோய் குறித்து இந்தியர்களிடையே, குறிப்பாகத் தமிழக மக்களிடையே போதிய விழிப்பு இல்லை. ஆனால், மேலை நாடுகளை விட இங்குதான் புராஸ்டேட் புற்றுநோய் மூலம் அதிக பாதிப்பு உள்ளது. இது குறித்து போதிய விழிப்புணர்வு மக்களிடையில் இருந்தால், எளிதில் நோயின் பாதிப்பைத் தடுத்துவிடலாம்” என்றார் அவர்.ஆண்களுக்கே வரக் கூடிய இந்த நோய்க்கான அறிகுறிகளை விவரித்த அவர், “ 50 வயதுக்கு மேற்பட்டோர் அடிக்கடி சிறுநீர் கழிப்பது, சிறநீரில் இரத்தம் வருவது,

சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், வலி ஏற்படுவது போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டால், பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். பி.எஸ்.ஏ. (PSA) எனப்படும் இரத்தப் பரிசோதனை எளிதானது. அத்துடன், நோய் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், அதை மிக எளிதாக முற்றிலும் குணப்படுத்திவிடலாம். புராஸ்டேட் புற்றுநோய் சிகிச்சையில் தற்போது ரோபாடிக் சர்ஜரி (Robotic Surgery) எனப்படும் நவீன வகை அறுவைச் சிகிச்சை நடைமுறைக்கு வந்துள்ளது. இது எளிதில் சிகிச்சை செய்யும் வழியாகும்" என்றார்.இன்றைய மனித வாழ்வில் மாறிவரும் உணவுப் பழக்கம், சுற்றுச்சூழல் பாதிப்பு ஆகியவை புராஸ்டேட் புற்றுநோய் தோன்ற முக்கிய காரணங்கள் என்று கூறிய அவர், "புராஸ்டேட் புற்றுநோய் நிறுவனம் (Indian Prostate Cancer Foundation) இது தொடர்பாக பல தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பார்வையாளர்களின் சந்தேகங்களுக்கு டாக்டர் அனந்தகிருஷ்ணன் சிவராமன் விளக்கங்களை அளித்தார். நீங்கள் 50 வயதைக் கடந்தவரானால் உடனே மருத்துவரை அணுகி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நலம்!